Registered as a Newspaper

சுடர் : 37 | கதிர் : 218 | சனிக்கிழமை 02 ஜூலை 2022 | ஆனி 18 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50

சரணடைந்து காணாமலாக்கப்பட்டோரின்

# ஆட்கொணர்வுத் தீர்ப்பு செப்ரெம்பர் 15 இல்!

வவுனியா, ஜூலை 2
போரின் இறுதிப் பகுதியில் சரண டைந்து காணாமல் ஆக்கப்பட் டோர் தொடர்பில் தொடரப்பட்ட ஆட்கொணர்வு மனு தொடர்பான தீர்ப்பு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி வழங்கப்படும் என்று தவ ணையிடப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் தெரிவித்தார்.

15 ➤

# நீர்வெறுப்பு நோயால் முல்லையில் ஆபத்து

முல்லைத்தீவு, ஜூலை 2
முல்லைத்தீவில் நீர்வெறுப்பு நோயால் பாதிக்கப்பட் டுள்ள நாய்களால், அந்தப் பகுதி மக்கள் கடுமையா கப் பாதிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளன என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு - இந்துபுரம் பகுதியில் நீர்வெறுப்பு நோயால் பாதிக்கப்பட்ட நாயொன்று

15 ➤

# சர்வகட்சி அரசாங்கத்தை நேர்மையாக அமைக்குக!

மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, ஜூலை 2
22ஆவது அரசமைப்புத் திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்ப டுத்தி, நேர்மையான சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்றை மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பிவைத்துள்ள னர்.

15 ➤

## கடற்கரையில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 2
ஊர்காவற்றுறைக் கடற்கரை யில் நபரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

15 ➤

## சொன்னது என்னாச்சு?

கோத்தாபயவுக்கு மைத்திரி பளார்!



கொழும்பு, ஜூலை 2
பொய் கூறி ஆட்சிக்கு வந்த ஜனா திபதி கோத்தாபய ராஜபக்ச, இன்று நாட்டைச்

15 ➤

## பனிப்புலத்தில் 58 லீற்றர் பெற்றோல் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2
இளவாலை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பனிப்புலம் பகுதியிலுள்ள வீடொன்றில் பதுக்கிவைக்கப் பட்ட 58 லீற்றர்

15 ➤



"கஞ்சாவைப் பொலிஸ் பிடிக்கிற மாதிரி இப்ப பெற்றோலை பிடிக்கிறதும் புதினம் ஆகிட்டு கண்டியளோ..."

பலாலி ஊடான

## விமானசேவை தாமதத்துக்கு இந்தியாவே முழுக் காரணம்

அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 2
பலாலிக்கும் இந்தியா வுக்கும் இடையிலான விமானசேவைகள் ஆரம் பிக்காதமைக்கு இந்தி யாவே முழுக்காரணம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

15 ➤

இந்தியாவுக்கான

## சரக்கு விமானங்கள் திடீரெனக் குறைப்பு

எரிபொருள் நெருக்கடி நிலையால் சிறிலங்கன் எயார்லைன்ஸ் கைவிரிப்பு

கொழும்பு, ஜூலை 2
திருச்சி, மதுரை விமான நிலையங் களிலிருந்து இலங்கைக்கு மேற் கொள்ளப்பட்டுவந்த சரக்கு விமா னச் சேவைகளைக் குறைத்துள் ளது சிறிலங்கன் எயார்லைன்ஸ்.
இலங்கை தலைநகர் கொழும்பில் இருந்து சென்னை, திருச்சி, மதுரை ஆகிய விமான நிலையங் களுக்கு சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் சரக்கு விமா னச் சேவையை வழங்கி

15 ➤

யாழ். விமான நிலையம்

## கண்துடைப்பாக நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 2
யாழ்ப்பாணம் விமான நிலையம் கண்துடைப்பு நடவடிக்கைபோல் நேற் றுமுதல் செயற்பட ஆரம் பித்திருக்

15 ➤

## உதவிக்கு கைவிரிக்கவில்லை ஜப்பானியத் தூதரகம் மறுப்பு!

கொழும்பு, ஜூலை 2
இலங்கைக்கு உதவி களை வழங்க முடியாது என்று ஜப்பானியத் தூது வர் கூட்டமைப்பினரிடம் தெரிவித்தார் என்று வெளி வரும் செய்திகள் ஆதார பூர்வமற்றவை என்று இலங்கைக்கான ஜப்பா னியத் தூதரகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.
'இலங்கைக்கு உதவி கள் வழங்கினால் அந்த உதவிகள் தவறாக முகாமை செய்யப்பட வும், மோசடி செய்யப்பட வும் வாய்ப்புக்கள் இருப் பதால்

15 ➤

பிள்ளைகள் இருவருடன்

## சந்திரிகா வாவியில் தாய் தற்கொலை!

கொழும்பு, ஜூலை 2
32 வயதுடைய தாயொருவர் தனது இரண்டு பிள் ளைகளுடன், எம்பிலிப்பிட்டிய சந்திரிகா வாவியில் பாய்ந்து தற்கொலை செய்துள்ளார்.

15 ➤

சாவகச்சேரி நிரப்பு நிலையத்தில் குழப்பம்

## சுகாதாரத்துறைக்கும் விநியோகம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று நீண்ட நேரமாக ஏற்பட்ட குழப்பங்களை அடுத்து சுகாதாரத்துறை யினருக்கு எரிபொருள் விநியோகிப்பதும் அங்கு நிறுத்தப்பட்டது.
சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றைய

15 ➤

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் சுகாதாரத்துறையினருக்கான எரிபொருள் விநியோகத்தில் குழப்பநிலை

மன்னார், ஜூலை 2

அத்தியாவசிய சேவைப் பணியாளர்களான சுகாதாரத் துறையினருக்கு மன்னாரிலுள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று எரிபொருள் விநியோகிக்கப்பட்டபோது குழப்பநிலை ஏற்பட்டதையடுத்து மன்னார் மாவட்டச் செயலர் தலையிட்டு அமைதியின்மையை சுமுக நிலைக்கு கொண்டுவந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தில் தற்போது ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் மாத்திரமே எரிபொருள் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு 6ஆயிரத்து 600 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்ட நிலையில் கடந்த வியாழக்கிழமை 500 மோட்டார் சைக்கிள்களுக்கும் அரச ஊழியர்களின் 400 மோட்டார் சைக்கிள்களுக்கும் 275 முச்சக்கர வண்டிகளுக்கும் ஏனைய 50 அமைப்புகளுக்கும் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

மிகுதி 2 ஆயிரம் லீற்றர் பெற்றோல் மறுதினம் வெள்ளிக்கிழமை சுகாதாரத்துறையினருக்கு பகிர்ந்தளிக்க கையிருப்பில் வைக்கப்பட்டது.

இந்தநிலையில் நேற்று வெள்ளிக்கிழமை சுகாதார சேவையினருக்காக ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அவர்களுக்கு எரிபொருள் விநியோகிக்க முற்பட்ட வேளை அங்கு தங்கள் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்ப குழுமியிருந்தவர்கள் தமக்கும் எரிபொருள் வழங்குமாறு கோரி அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் நிலைமையை ஆராய்ந்து குழப்பநிலையை சுமுகமாக்கினார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-60)

# வெள்ளியில் எரிபொருள் எமக்கு இல்லையா?

## மன்னார் சுகாதாரத் துறையினர் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்



மன்னார், ஜூலை 2

**மன்னார் மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளில் கடமையற்று சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் தமக்கு எரிபொருள் வழங்குமாறு நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணிவரை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் முன்பாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.**

நாட்டில் உள்ள சுகாதார சேவையாளர்களுக்கான பிரத்தியேக எரிபொருள் விநியோகம் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படுகின்றது. எனினும் மன்னார் மாவட்டத்தில் உள்ள சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உரிய முறையில் எரிபொருள் வழங்கப்படவில்லை.

மன்னார் மாவட்ட சுகாதார திணைக்களத்தில் சுமார் ஆயிரத்து 200 வரையிலான பணியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர். இவர்களில் அதிகமானவர்கள் தூர இடங்களிலிருந்து வந்து கடமையாற்றுகின்றனர்.

வெள்ளிக்கிழமை சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த பணியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படவேண்டும். ஆனால் ஏனைய மாவட்டங்களில் உரிய முறையில் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது.

மன்னார் மாவட்டத்தில் ஒதுக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையத்தில் கடந்த வாரமும், இந்த வாரமும் உரிய முறையில் எரிபொருள் வழங்கப்படவில்லை.

எனவே தமக்கு உரிய முறையில் எரிபொருளைப் பெற்றுத்தருமாறு கோரி பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் அங்கு சென்ற மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதனிடம் தமது கோரிக்கை அடங்கிய மனுவையும் அவர்கள் கையளித்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தனர். (ச-213)

*வவுனியா எரிபொருள் நிலையத்தில்*

# சிப்பாயைத் தாக்க பொதுமகன் முயற்சி

வவுனியா, ஜூலை 2

வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கப் பகுதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் சிப்பாய் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார்.

எரிபொருள் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை டீசல் பெறுவதற்காக கனரக வாகனத்தை வரிசையில் நிறுத்திவிட்டு சாரதி ஒருவர் காத்திருந்தார். நீண்ட நேரமாக டீசல் வழங்காமையால் அவர் வாகனத்தை வரிசையில் இருந்து எடுத்துச் சென்றுள்ளார். அதன்பின் இரவு டீசல் வழங்கப்பட்ட போது, குறித்த நபர் ஏற்கனவே தான் இந்த இடத்தில் நின்றதாகத் தெரிவித்து டீசலைப் பெற முயற்சித்துள்ளார். இதற்கு ஏனைய வாகன சாரதிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதன்போது கடமையில் இருந்த சிப்பாய் ஒருவர், சாரதியை குழப்பத்தை ஏற்படுத்தாது வாகனத்துடன் வெளியேறுமாறு தெரிவித்தார்.

அதனையடுத்து சாரதிக்கும், சிப்பாய்க்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டபோது சிப்பாய் மீது அவர் தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்துள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சிப்பாய் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்தமை மற்றும் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை தொடர்பில் அவரைக் கைது செய்ததுடன் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14,இ)

*அச்சுவேலி - யாழ்ப்பாணம் ஊடாக*

# 60 பஸ்கள் பயணித்த தடத்தில் இப்போது 6 பஸ்கள் மாத்திரம்

## பொதுமக்கள் சிரமம்

எரிபொருள் தட்டுப்பாட்டால் அச்சுவேலி-யாழ்ப்பாணம் ஊடாக தற்போது ஆறு தனியார் பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன என்று தனியார் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி பஸ் தரிப்பிடத்தில் நேற்று நீண்ட நேரமாக மக்கள் காத்திருந்தனர். எனினும் தனியார் பஸ்கள் பெரிதாக சேவையில் ஈடுபடவில்லை. இது தொடர்பில் தனியார் பஸ் பிரதிநிதிகளைத் தொடர்புகொண்ட போது, டீசல் தட்டுப்பாடு காரணமாக பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அச்சுவேலி தனியார் பஸ் சேவையில் 60 பஸ்கள் சேவையில் ஈடுபட்ட போதிலும் தற்போது ஆறு பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன. இதனால் பஸ் சாரதிகள் அத்தியாவசிய போக்குவரத்துச் சேவையிலிருந்தும் பாடசாலை சேவைகளிலிருந்தும் விலகியுள்ளனர். பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டதால் சாரதிகளும் நடத்துநர்களும் பொருளாதார ரீதியாக பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கோண்டாவில் பேருந்து சாலையில் டீசலைப் பெறுவதற்காக பல நாள்களாகக் காத்திருக்கின்ற பொழுதும் தமக்கான டீசல் இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்தனர். (ஒ-14.26)

# எரிபொருள் வழங்கத் தவறின் மருத்துவக் கட்டமைப்பு முடங்கும்

***அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை***

கொழும்பு, ஜூலை 2

சுகாதாரக் கட்டமைப்பை வீழ்ச்சியடையாது தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமானால் சுகாதாரத் தரப்பினருக்கான எரிபொருளை பெற்றுக்கொடுக்க வேண்டும். இல்லையேல் இரண்டு வாரங்களில் சுகாதாரக் கட்டமைப்பு முழுமையாக வீழ்ச்சியடையும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் நெருக்கடி குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மேற்கொண்ட கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திப்பில் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே, மட்டுப்படுத்தப்பட்டுள்ள எரிபொருளை நாட்டின் பிரதான துறைகளுக்கு வழங்கவேண்டும். இல்லையேல் அடுத்த இரண்டு வாரங்களில் மருத்துவக் கட்டமைப்பும் வீழ்ச்சியடையும் நிலையை எட்டும்.

இதனால் நோயாளர் பெரும் நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும். ஆகவே முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய விடயங்களை அரசாங்கம் கருத்திற் கொண்டு அதற்கமைய செயற்படவேண்டும் சர்வதேச நாடுகளிடம் இருந்து அத்தியாவசிய மருந்துகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-இ)

*எரிபொருள் வழங்க மறுப்பு*

# கைதடி முதியோர் இல்லத்தின் பணியாளர்கள் கவனவீர்ப்பு

சாவகச்சேரி, ஜூலை 2

கைதடி முதியோர் இல்லத்தில் பணியாற்றுவோருக்கு பெற்றோல் வழங்க மறுத்தமையால் அவர்கள் நேற்று ஏ-9 வீதியில் நடந்து சென்று கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி எரிபொருள் நிலையத்தில் ரோக்கன் பெற்று கைதடி முதியோர் இல்ல பணியாளர்கள் நீண்டநேரம் வரிசையில் காத்திருந்தனர்.

இந்த நிலையில் அவ்விடத்துக்கு வந்த சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் வெள்ளிக்கிழமைகளில் சுகாதாரத் திணைக்களத்தினர் தவிர்ந்த ஏனையோருக்கு பெற்றோல் விநியோகிக்க வேண்டாம் எனக் கூறியதால் முதியோர் இல்லப் பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்க மறுக்கப்பட்டது.

இந்த நிலையில் அதிருப்தியடைந்த முதியோர் இல்ல பணியாளர்கள் எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அங்கிருந்து ஊர்வலமாக கைதடி முதியோர் இல்லம் நோக்கி நடந்து சென்றனர்.

கைதடி முதியோர் இல்லம் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற நிலையில் முதியோர்களைப் பராமரிப்போர் அத்தியாவசிய சேவையில் உள்ளவர்களே எனவும் அவர்கள் ஆதங்கம் வெளியிட்டனர். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடிக்கையாளரின் நலன்கருதி வீட்டிலிருந்தே விளம்பரங்களை உதயனுக்கு அனுப்பும் வசதி!

எரிபொருள் நெருக்கடியால் உங்கள் அபிமான உதயன் பணிமனைக்கு வந்து விளம்பரங்களை கையளிக்க முடியாதுள்ள நடைமுறைச்சிக்கலைத் தீர்க்கும் வகையில்,



இனிமேல் நீங்கள் இருக்குமிடத்தில் இருந்தபடியே உதயனுக்கு விளம்பரங்களை
மின்னஞ்சல்/ வட்ஸப்/ வைபர்
போன்றவற்றின் ஊடாக அனுப்பி வைக்க

விளம்பரக் கட்டணத்தை , வங்கிகளில் நேரடியாகவோ அல்லது ஒன்லைன் மூலமோ வைப்பிட்ட உறுதிச்சிட்டையின் புகைப்படத்தை அனுப்பிவைப்பதனூடாக விளம்பரம் பிரசுரமாவதை உறுதி செய்யலாம்.

வைபர், வட்ஸப் ஊடாக விளம்பரங்களைச் செம்மை பார்க்கும் வசதியும் வழங்கப்படும்.

விளம்பரங்களை அனுப்பவேண்டிய வட்ஸப்/வைபர் இலக்கம்

077 120 9996

மின்னஞ்சல்: advt@uthayan.com


## அச்சுவேலியில் குடிதண்ணீர் தாங்கி

யாழ்ப்பாணம், ஜூலை 2

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் குடிதண்ணீர் தாங்கி வைக்கப்பட்டுள்ளது.

எரிபொருளுக்காகக் காத்திருப்போருக்கு குடிதண்ணீர் வழங்குவதற்காக இராணுவத்தால் இந்த தாங்கி வைக்கப்பட்டுள்ளது.

கடுமையானவெயில் காலமாக இருப்பதால், வரிசையில் காத்திருப்போருக்கு குடிதண்ணீர் வழங்குவதற்காக தண்ணீர் தாங்கி வைக்கப்பட்டுள்ளது.

(ஒ-14,26)

# எந்தச் சட்டத்தை மீறினார்கள்?

### ஆர்ப்பாட்டக்காரர்கள் அகற்றப்பட்டமை குறித்து கனேடியத் தூதுவர் கேள்வி

கொழும்பு, ஜூலை 2

**காலிக்கோட்டையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அகற்றுவதற்கு இராணுவத்தை பயன்படுத்தியது குறித்து இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்கினன் ருவிற்றர் பதிவொன்றில் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.**

கிரிக்கெட் இலங்கையில் மிகப்பெரிய விடயம் என்பது எனக்கு தெரியும். இராணுவத்தினரை பயன்படுத்தவேண்டிய அளவுக்கு இது தேசிய பாதுகாப்பு விடயமா? என்று தூதுவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த இவர்கள் எந்தச் சட்டத்தை மீறினார்கள் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

(ஒ-இ)

*எரிபொருள் நெருக்கடி*

## ஊழியர்கள் வராமையால் 22 ரயில் சேவைகள் ரத்து

அலுவலக ரயில்கள் உட்பட 22 ரயில் சேவைகள் நேற்று ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. எரிபொருள் பிரச்சினை காரணமாக ஊழியர்கள் கடமைக்கு அறிக்கையிடவில்லை என ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக, கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் பயணத்தை ஆரம்பித்து, பிரதான மார்க்கத்தில் பயணிக்கும் அலுவலக ரயில்கள் உள்பட, ஏனைய பல ரயில்களின் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)



## துடுப்பாட்ட வீரர்களின் கவனம் சிதறிவிடுமாம்!

### காலியில் ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றியதற்கு இராணுவத்தின் விளக்கம்

கொழும்பு, ஜூலை 2

துடுப்பாட்ட வீரர்களின் கவனம் பாதிக்கப்படுவதை தவிர்ப்பதற்காகவே காலிக்கோட்டையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அகற்றப்பட்டனர் என்று இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் நிசாந்த பிரேமரட்ண தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து அகற்றவில்லை அவர்களது ஆர்ப்பாட்டத்தை தடுத்துநிறுத்தினோம் என்று குறிப்பிட்டுள்ள அவர் துடுப்பாட்ட வீரர்களின் கவனம் பாதிக்கப்படும் என்பதாலேயே ஆர்ப்பாட்டங்களை தடுத்து நிறுத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகைகளை கையில் வைத்திருந்தனர். அதன் காரணமாக துடுப்பாட்ட வீரர்களின் கவனம் சிதறும் நிலை காணப்பட்டது. இதன் காரணமாக அவர்களை அகற்றுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் காலியில் நடைபெற்றது. இதன்போது அரசாங்கத்துக்கு எதிரான பதாகைகளுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு கோசம் எழுப்பினர். இதனையடுத்து அவர்கள் இராணுவத்தினரால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-இ)




ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சுகாதாரத் துறையில வேலை செய்யிறவைக்கு பெற்றோல் குடுபடும் எண்டும், எந்தெந்த செற்றுகளில அப்பிடி பெற்றோல் அடிக்கலாம் எண்டும் அரசாங்கம் ஒரு அறிவித்தலை விட்டிருந்தது. அடுத்த பெற்றோல் கப்பல் இனி எப்ப வருமோ எண்டு தெரியாத நிலையில, ஐ.ஓ.சி பெற்றோல் செற்றுகளில இடைக்கிடை இப்ப அத்தியாவசிய வேலை செய்யிறவைக்கு பெற்றோல் குடுக்கினம். அவைக்கு சீராகக் குடுக்கிறதுக்காக, மற்ற ஆக்களை (சாதாரண மக்கள், அத்தியாவசியத் துறையளுக்குள்ள வராத அரச உத்தியோகத்தர் மார்) செற்றுகளுக்கு முன்னால வரிசையில நிக்க வேண்டாம் எண்டும் அரசாங்கம் சொல்லியிருந்தது.

ஆனால் அரசாங்கம் என்னதான் காட்டுக் கத்தல் கத்தினாலும், எங்கட ஆக்கள் கிழமைக்கணக்கில தங்கட வாகனங்களோட கிலோமீற்றர் கணக்கில வரிசைகட்டி, அங்கேயே சாப்பிட்டு, பாய்போட்டு படுத்து, ஆடாமல் அசையாமல் அங்கேயே தங்கட இருப்பிடத்தை மாத்திட்டினம். இதால அரசாங்கம் போட்ட திட்டப்படி அத்தியாவசியப் பணியாளர்களுக்கு கூட பெற்றோல் குடுக்க முடியாத அளவுக்கு, எல்லா செற்றுகளிலையும் ஒரே சண்டையும், சச்சரவுமா இருக்கு.

நேற்றும் வெள்ளிக்கிழமை எண்டதால, ஐ.ஓ.சி செற்றுகளுக்கு ஆஸ்பத்திரியில வேலை செய்யிற டொக்டர், நேர்ஸ், சிற்றூழியர்கள் எண்டு எல்லாரும் தங்கட வாகனத்தோட பெற்றோல் அடிக்கப் போனால், 'நாங்கள் நாலைஞ்சு நாளா சாப்பாடு, தண்ணியில்லாமல் இஞ்ச கிடந்து காயுறம். அப்பிடி கஷ்டப்பட்டு வரிசையில நிக்கிற எங்களை விட்டிட்டு எப்பிடி அவைக்கு ( காதாரத்துறை ஆக்களுக்கு) பெற்றோல் அடிப்பியள்? அப்பிடி அடிக்க விடமாட்டம். அதையும் மீறி அவைக்கு பெற்றோல் குடுத்தால் பெரும் பிரச்சினை தான்' எண்டு சண்டித்தனக் கதையளோட அங்க நிண்டவை மல்லுக்கட்ட வெளிக்கிட்டிருக்கினம். ஒருசில செற்றுகளில சுகாதாரத் துறையைச் சேர்ந்த கொஞ்சப்பேருக்கு பெற்றோல் குடுபட்டாலும், நிறைய செற்றுகளில 'தாங்களும் பெற்றோல் அடிக்காமல், சுகாதாரத்துறை ஆக்களையும் பெற்றோல் அடிக்க விடாமல்' அங்க நிண்டவை குழப்பியடிச்சிருக்கினம்.

நாலைஞ்சு நாளா அன்னம், தண்ணியில்லாமல் இந்த வெயிலுக்குள்ள காய்ஞ்சபடி லைனில நிக்கிறது கஷ்டம்தான். ஆனால் 'பெற்றோல் இனிமேல் அத்தியாவசியப் பணியாளருக்கு மட்டும் தான். அவையைத் தவிர வேற ஆக்கள் லைன்ல நிக்க வேண்டாம்' எண்டு அரசாங்கம் தெளிவாச் சொன்ன பிறகும் எதுக்கு வில்லங்கத்துக்கு லைன்ல நிண்டு காயவேணும்? சாதாரண மக்களுக்கும் பெற்றோல் வேணும்தான். எல்லாருக்கும் இப்ப அது அத்தியாவசியம்தான். ஆனால், எல்லாத்தையும் விட உயிர்தான் மனிசருக்கு பெரிசு. அந்த உயிரைக் காக்கிற பணியைச் செய்யிற டொக்டர், நேர்ஸ், குடும்பநல மாதுக்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், பணியாளர்கள் எண்டு சுகாதாரத்துறையில இருக்கிறவை, அவையின்ர வேலைக்கு போய்வர பெற்றோல் குடுத்தால்தான், நாளைக்கு எங்களுக்கு ஏதும் நடந்தால், அவையால காப்பாத்த முடியும். இப்ப அவையை பெற்றோலும் அடிக்க விடாமல் குழப்பிப் போட்டு, நாளைக்கு 'ஆஸ்பத்திரியில ஆக்கள் வேலைக்கு வாறேலை, வந்திருந்தால் அவையின்ர உயிரைக் காப்பாத்தி இருக்கலாம் எண்டு புலம்பிப் பலனில்லை. இப்ப ஆருக்கு, எது முக்கியம் எண்டதை விளங்கிக் கொண்டு அவையவைக்கு வழிவிடுற பெரிய மனசு எங்களுக்கு வாய்க்கவேணும். இல்லாட்டி இப்பிடி எல்லாத்தையும் குழப்பியடிச்சால், நிலைமை இன்னும் மோசமாத்தான் போகும் கண்டியளோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பருத்தித்துறை, முல்லை கடற்பரப்புக்குள்

# அத்துமீறி நுழைந்த தமிழகப் படகுகளால் ரூ.6 லட்சம் பெறுமதியான வலைகள் நாசம்

**யாழ்ப்பாணம், ஜூலை 2**

**பருத்தித்துறை, முல்லைத்தீவு கடற்பரப்புக்குள் இந்த வாரம் அத்துமீறி நுழைந்த தமிழக இழுவைப்படகுகளால் சுமார் ரூபா 6 லட்சம் பெறுமதியான வலைகள் நாசமடைந்துள்ளன. இதனால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பெரியளவில் பாதிப்படைந்துள்ளது என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா சுட்டிக்காட்டியுள்ளார்.**

யாழில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக மீனவர்களின் எல்லை தாண்டிய இழுவைமடித் தொழிலால், வடக்கு மாகாண மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

எல்லை தாண்டி வடக்குக் கடற்பரப்புக்குள் வருகை தரும் தமிழக மீனவர்களைக் கட்டுப்படுத்துமாறு பல போராட்டங்களை நடத்தியது மட்டுமல்லாது எழுத்து மூலமாக பல கடிதங்களையும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு வழங்கியுள்ளோம். எனினும் அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எமது நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில் இந்தியா உதவுவதை நாம் வரவேற்கும் அதே சமயம் உதவி கொடுத்து எம்மை இவ்வாறான நிலைக்குத் தள்ளக்கூடாது.

இந்த வாரம் பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த தமிழக இழுவைப்படகுகளால் சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் நாசமடைந்துள்ளன. இவ்வாறான நிலை தொடர்ந்தால் பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் நிலையில் எம்மை மேன்மேலும் அழிவடையச்செய்யும்.

எனவே தமிழக எல்லை தாண்டிய இழுவைப் படகுகளை இந்திய அரசாங்கம் கட்டுப்படுத்தாவிட்டால், எமது மீனவர்களின் பாதுகாப்பையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாத்துத் தருமாறு வெளிநாட்டுத் தூதரகங்களிடம் கோரிக்கை விடுப்பதைத் தவிர வேறு வழியில்லை -என்றார். (ஒ-14-27)



## வடக்கு – கிழக்கு இணைப்புப் பாலத்தின் புனரமைப்பு ஆரம்பமாகவேயில்லை

முல்லைத்தீவு, ஜூலை 2

முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களை இணைக்கும் கொக்கிளாய் பாலத்தின் புனரமைப்புப் பணி தற்போது வரை ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் இரண்டு மாவட்டங்களிலும் உள்ள எல்லைக்கிராம மக்கள், மாணவர்கள் எனப்பலரும் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்

முல்லைத்தீவு - கொக்கிளாய் வீதியையும், புல்மோட்டை - திருகோணமலை வீதியையும் இணைத்து கொக்கிளாய் கடல்நீரேரி ஊடாக சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு பாலம் ஒன்று அமைப்பதற்கு உரிய அதிகாரிகளுக்கு கடந்த 2017 ஆம் ஆண்டு கோரிக்கை விடுக்கப்பட்டது. அப்போதைய தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சால் முல்லைத்தீவு, திருகோணமலையை இணைக்கும் கொக்கிளாய் பாலம் புனரமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன்பின் கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், பாலம் அமைப்பதற்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதற்கமைய 2019 ஆம் ஆண்டு கொக்கிளாய் பாலம் அமைப்பதற்கான வேலைகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்பித்துள்ளதாகவும், பணிகளை மூன்று மாத காலத்துக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அப்போதைய திட்டப் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

ஆனால் இதுவரையில் பாலம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் ஒரு கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து செல்ல வேண்டிய மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் சுமார் 60 கிலோமீற்றர் தூரத்தைச் சுற்றிக் கடந்து செல்ல வேண்டிய நிலையில் ஆபத்தான கடற்பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். தற்போதைய எரிபொருள் நெருக்கடிகளில் மிக நீண்ட தூரம் பயணித்து தங்களுடைய தேவைகளை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குப் பொதுமக்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-113)




## பழைய சைக்கிளைத் திருத்த 20 ஆயிரம் ரூபா செலவு

சாவகச்சேரி, ஜூலை 2

பழைய சைக்கிளை திருத்தி பாவனைக்குட்படுத்த தற்போது 20ஆயிரம் ரூபாவரை செலவாகிறது என மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிள் பாவனையாளர் எரிபொருளை பெற நீண்ட வரிசையில் காத்திருப்பதை விட சைக்கிள்களில் தமது அன்றாட பணியைத் தொடர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

சைக்கிள் கொள்வனவு அதிகரித்துள்ள நிலையில், அதன் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது.

புதிய சைக்கிள்களின் விலை 75 ஆயிரம் ரூபாவைத் தாண்டியுள்ளது. புதிய சைக்கிள்களை கொள்வனவு செய்ய முடியாத நிலையில் வீடுகளிலுள்ள பழைய சைக்கிள்களை மீண்டும் பாவனைக்குட்படுத்துவற்காக திருத்தியமைக்க 20 ஆயிரம் ரூபா வரை செலவாகின்றது.

முன்பு சுமார் ஆயிரம் ரூபாவாக காணப்பட்ட ரயர் ரியூப் தற்போது 3 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. ஏனைய உதிரிப் பாகங்களின் விலைகளும் மூன்று மடங்காக அதிகரித்துள்ளன.

ஆகவே அரசாங்கம் மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு சைக்கிள் மற்றும் உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் கரிசனை காட்டவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-9)

### எரிபொருள் தட்டுப்பாடு

## ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படும் அபாய நிலை

நாட்டில் 200 சிறிய மற்றும் நடுத்தர ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சாரத் தடை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

பெரிய ஆடைத் தொழிற்சாலைகள் ஐ.ஓ.சி. நிறுவனத்திடமிருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்கின்றபோதிலும், சிறிய மற்றும் நடுத்தர ஆடைத்தொழிற்சாலைகள் எரிபொருள் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளன.

அத்துடன் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களும் வந்து செல்வதற்கு போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இந்த நிலையில் பெரும்பாலான ஆடைத்தொழிற்சாலைக்கள் மூடப்படும் அபாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. (ச-இ)

# தென்மராட்சி கிழக்கு கூ.சங்கத்துக்கு மண்ணெண்ணெய் வழங்கவில்லை

### பொதுமக்கள் குற்றச்சாட்டு

சாவகச்சேரி, ஜூலை 2

தென்மராட்சிக் கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை என்று சங்க எல்லைக்குட்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் மண்ணெண்ணெய் பெறுவதற்காக குடும்ப அட்டையுடன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மக்கள் சென்றனர். எனினும் அங்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை.

இதனையடுத்து தென்மராட்சிக் கிழக்கு ப.நோ.கூ.சங்க நிர்வாகத்துடன் தொடர்புகொண்ட போது, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தால் தென்மராட்சியில் சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்துக்கு மட்டும் இரண்டு மாதங்களுக்குப் பின்னர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. ஆனால் 28 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சிக் கிழக்கு ப.நோ.கூ சங்க எரிபொருள் நிலையத்துக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை.

பெற்றோலியக் கூட்டுத்தாபன பிராந்திய அலுவலகத்துடன் பல தடவைகள் தொடர்புகொண்டு மண்ணெண்ணெய் வழங்குமாறு கோரியும் இரண்டு மாதங்களுக்கு மேலாக எமது சங்கத்துக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை. மின்சாரம் அடிக்கடி இரவு நேரத்தில் துண்டிக்கப்படுவதால் மக்களின் பாவனைக்கு மண்ணெண்ணெயை பங்கீட்டு அட்டைக்குக் கூட வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய்க்காக அலைந்து திரியும் எமது நிலைகண்டு யாழ். மாவட்டச்செயலர் கவனமெடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் தெரிவித்ததாக தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஒ-14-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பஸ் கட்டண உயர்வு:

# தனியார் பேருந்து சேவையை மக்கள் புறக்கணிக்கும் அபாயம்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் ஆதங்கம்

**கொழும்பு, ஜூலை 2**



**எரிபொருள் பற்றாக்குறை காரணமாக போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமை முறையற்றதாகும் எனத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.**

பஸ் கட்டண திருத்தம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனியார் பஸ் சேவைக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுப்பதற்கு முறையான நடவடிக்கைகள் ஏதும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. பெரும்பாலான உரிமையாளர்கள் எரிபொருள் வரிசையில் இருந்து எரிபொருளைப் பெற்றே மக்களுக்கான சேவையில் ஈடுபடுகின்றனர். எரிபொருள் பற்றாக்குறையால் 90 சதவீதமான பஸ்கள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. இதனால் பயணிகள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர். இந்த நிலையில் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ளக் கூடியதொரு செயற்பாடல்ல.

தனியார் பஸ் சேவை தொழிற்றுறையை பாதுகாக்கவேண்டும் என்பதற்காகவே பஸ் கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறைந்தபட்ச கட்டணம் 40 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் இனிவரும் காலங்களில் தனியார் பஸ் சேவையை புறக்கணிப்பர் - என்றார். (ச-இ)

### விபத்துக்களால்

# நாட்டில் வருடாந்தம் 12 ஆயிரம் பேர் சாவு

கொழும்பு, ஜூலை 2

நாட்டில் வருடாந்தம் இடம்பெறுகின்ற விபத்துக்களில் சிக்கி 12 ஆயிரம் பேர் வரையில் உயிரிழக்கின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் சுமார் 3 ஆயிரம் பேர் வீதி விபத்துக்களில் சிக்கி உயிரிழக்க நேரிடுகிறது எனப் போக்குவரத்து, கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான வயோதிபர்கள் கீழே வீழ்வதன் மூலம் விபத்துகளுக்கு உள்ளாகின்றனர் என சுகாதார அமைச்சின் இளைஞர், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் பிரிவின் பிரதான விசேட சிறப்பு நிபுணர் ஷிரோமி மதுவகே தெரிவித்தார். (ச-இ)

### ஐவர் சுட்டுப் படுகொலை:

# 22 ஆண்டுகளின் பின்னர் 6 பேருக்கு மரணதண்டனை

கொழும்பு, ஜூலை 2

ஐவரை சுட்டுப்படுகொலை செய்த குற்றச்சாட்டில் 6 பேருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் மாத்தறை மேல் நீதிமன்றம் 22 ஆண்டுகளுக்குப் பின் நேற்று முன்தினம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொலைக்குற்றச்சாட்டு தொடர்பிலான வழக்கொன்றுக்குச் சென்றுகொண்டிருந்த ஐவர் தெவினுவர விகாரைக்கு அருகே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரால் 15 பேருக்கு எதிராக மாத்தறை மேல்நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

இந்த நிலையில் 22 ஆண்டுகளாக நடைபெற்ற இந்த வழக்கு நேற்றுமுன்தினம் நிறைவுக்கு வந்ததன் பின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதில் குற்றஞ்சுமத்தப்பட்ட 15 பேரில் நான்கு பேர் வழக்கு விசாரணையிடையே உயிரிழந்த நிலையில் 5 பேரை நிரபராதிகள் என அறிவித்து நீதிமன்றம் விடுவித்தது.

அத்துடன் 6 பேர் குற்றவாளிகள் என நிரூபணமாகியுள்ள நிலையில் அவர்களுக்கு மரணதண்டனை விதித்து மாத்தறை மேல் நீதிமன்ற நீதிபதி தாமர தென்னகோன் தீர்ப்பளித்துள்ளார். (ச-இ)

# வவுனியா நகரப் பகுதியில் முதியவர் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூலை 2

வவுனியா நகரப் பகுதியிலிருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, மில் வீதி பகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையம் ஒன்றின் வெளிப்புறத்திலுள்ள இடமொன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறித்த முதியவர் இறந்த நிலையில் காணப்படுவதை அவதானித்த வர்த்தகர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு வவுனியா மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

முதியவர் நீல நிற சேர்ட்டும், சாரமும் அணிந்துள்ளார் எனவும் இதுவரை அவர் அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-18)



### யானை தாக்கி சிப்பாய் சாவு

கொழும்பு, ஜூலை 2

அரலகங்வில, வலமண்டிய காட்டுப்பகுதியில் யானை தாக்கியதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவப் பயிற்சி குழுவொன்றில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையே யானை தாக்குதலுக்கு இலக்காகி 19 வயதுடைய குறித்த சிப்பாய் உயி ரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)




இலங்கை அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலியில் நடைபெற்றது. இரண்டாம் நாள் ஆட்டத்தின்போதும் அரசாங்கத்துக்கு எதிரான பதாகைகளை கிரிக்கெட் ரசிகர்கள். ஏந்தியிருந்தனர். (ஒ-5)

# மருந்துத் தட்டுப்பாட்டுக்கு உடன் தீர்வு வழங்குங்கள்

*அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை*

கொழும்பு, ஜூலை 2

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டுக்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் மருத்துவமனையில் சேர்க்கப்படும் நோயாளி மருந்து இல்லாது உயிரிழக்கநேரிடும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்ததாவது:-

மருந்துத் தட்டுப்பாடுகளுக்கு உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்வரும் வாரங்களில் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

தற்போது அனைத்து மருத்துவமனைகளிலும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகின்றது. மருந்துப் பற்றாக்குறை உள்ள போதும் ஒரு மருந்து இல்லை என்றால், மாற்று மருந்துப் பயன்பாடு உள்ளது.

எனினும், எதிர்வரும் வாரங்களில் உரிய முறையில் இதனை நிர்வகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிடின் நோயாளி ஒருவரை மருத்துவமனையில் சேர்க்கும்போது அவர் மருந்து இல்லாது மரணிக்கக்கூடும்- என்றார். (ச-இ)

# சட்டவிரோதமாக ஆஸி சென்ற 46 பேர் நாடு கடத்தப்பட்டனர்

சிட்னி, ஜூலை 2

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக சென்ற 46 பேரை அவுஸ்திரேலிய அரசாங்கம் மீண்டும் இலங்கைக்குத் திரும்பி அனுப்பியுள்ளது. சிலாபம் பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் நீர்கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டவுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் இரட்டைவேடம்?

கட்டுரையாளர்
உபுல் ஜோசப் பெர்னாண்டோ

மொழியாக்கம்
ஸ்டீபன் மாணிக்கம்




ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தனது மாமனாரின் பத்திரிகையான டெய்லி மிரரிடம் அற்புதமான கருத் தொன்றை வெளியிட்டிருந்தார். கொழும்பு-7 பிரதேசத்தில் 5ஆம் ஒழுங்கையில் உள்ள தனது வீட்டை முற்றுகையிட சென்றிருந்த ஹிருணிகா பிரேமச்சந்திரவை சமூக ஊடகங்களில் அவமானம் செய்ய வேண்டாம் என ரணில் கூறியிருந்தார்.

தனது வீட்டை முற்றுகையிட சென்ற ஹிருணிகா உட்பட பெண்களை ரணில் பொலிஸாரைப் பயன்படுத்தி துன்புறுத்தினார். பொலிஸார் பலவந்தமாக ரணிலின் வீட்டுக்கு பாதுகாப்பு வழங்குவதில்லை.

நாட்டின் ஜனாதிபதி அல்லது பிரதமரின் வீட்டுக்கு எதிரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடக்கின்றது என்பதை அறிந்தால், ஒன்றில் அதனை மேற்கொள்ள இடமளித்துவிட்டு அமைதியாக இருப்பார்கள் அல்லது அதனை அடக்கப் பொலிஸாரை அழைப்பார்கள். ரணில் இரண்டாவதை தெரிவு செய்தார். இதனை தெரிவு செய்த ரணில், வேறு யாருமல்ல, தெற்காசியாவில் பெண்களின் விடுதலை, பெண்களுக்கு அரசியலில் ஈடுபடும் உரிமை, பெண்களின் தலைமைத்துவம், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றி விரிவுரை வழங்கும் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவின் கணவர்.

சாதாரணமாக ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கைகள் உருவாக்கப்படும்போது, பெண்கள் சம்பந்தமான கொள்கைகளை மைத்திரியே உருவாக்குவார். இலங்கை அரசியல் கட்சிகளின் கொள்கை அறிக்கைகளில் மைத்திரியின் தலையீடு காரணமாகவே முன்னுரிமை கிடைத்தது.



இதன் காரணமாகவே ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கை அறிக்கையில் பெண்களுக்கான தனியான பகுதி உள்ளடக்கப்பட்டது. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் அறிக்கைக்கு மைத்திரி யோசனை ஒன்றை முன்வைத்தார். கணவன், தனது மனைவியிடம் பாலியல் விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றிக்கொள்ளும்போது மனைவி அதனை நிராகரித்து, கணவனுக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு செய்யும் உரிமையை பாதுகாக்கும் சட்டதிட்டங்களைக் கொண்டுவரவேண்டும் என்ற யோசனையை முன்வைத்தார்.

கொள்கை அறிக்கையை தயாரிக்கும் குழுவினர் இதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தனர். இது மேற்குலக நாடுகளுக்குப் பொருந்துமே தவிர இலங்கைக்கு பொருந்தாது எனக் கூறினர்.

அத்துடன் ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுவில் பெண்களின் விடுதலைக்கான குரல் கொடுக்கும் பெண்களை உள்ளடக்க மைத்திரி, ரணிலைத் தூண்டினார்.

2015 ஆம் ஆண்டு ரணில் பிரதமராகப் பதவியேற்ற பின்னர் மைத்திரிக்கு பெண்களின் விடுதலை சம்பந்தமாக விரிவுரையற்ற உலகில் பல நாடுகளிடம் இருந்து அழைப்பு கிடைத்தது. அவர் எழுதிய பெண்கள் உரிமைகள் தொடர்பான நூல்களுக்கு விருதுகளும் கிடைத்தன. மைத்திரி விக்கிரமசிங்க, பெண்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் செயற்பாட்டாளர் மாத்திரமல்ல. களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும்கூட. மேலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் உறுப்பினராகவும் இருக்கின்றார். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரி மஹிந்த அரசாங்கத்துக்கு எதிராக நடத்தப்பட்ட ஊர்வலத்திலும் கலந்துக்கொண்டார்.

**ரணில் பிரதமராக பதவியேற்றதை மைத்திரி எதிர்த்தாரா?**

கடந்த மே மாதம் ரணில் விக்கிரமசிங்கவை கோத்தாபய ராஜபக்ச பிரதமராக நியமித்ததை கண்டித்து அறிக்கையை வெளியிட்டது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம். தேர்தலில் தோல்வியடைந்து தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவான ஒருவருக்குப் பிரதமர் பதவியை வழங்குவது தார்மீக விரோதசெயல் என அந்த சங்கம் கூறியிருந்தது.

மைத்திரி விக்கிரமசிங்க விரிவுரையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் என்ற வகையில் அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டாரா? அது தெரியாது. எனினும் ரணில் விக்ரமசிங்க, பிரதமராகப் பதவியேற்கும் நிகழ்வில் மைத்திரி கலந்துக்கொண்டார். ரணில் 2020 ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், மைத்திரி சுகவீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோது, மஹிந்த, ஷிரந்தி, நாமல் ஆகியோர் அவரை பார்க்க மருத்துவமனைக்கு சென்றிருந்தனர். இதன்போது ரணில் தேசிய பட்டியலில் நாடாளுமன்றத்துக்கு வரவேண்டும் என மஹிந்த கூறிய போது, மைத்திரி அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டார் என சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது. மைத்திரியின் எதிர்ப்பை மீறி ரணில் நாடாளுமன்றத்துக்கு வந்தாரா? இது அவர்கள் இருவருக்கு மட்டுமே தெரியும்.

**ஜே.ஆரின் தீர்மானத்தை எதிர்த்த எலினா ஜெயவர்தன**

1988 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்தன இரண்டாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தீர்மானித்த போது அதனை கடுமையாக எதிர்த்தவர் அவரது மனைவியான எலினா ஜெயவர்தன.

மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாக பதவிக்கு வர தேவையான வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றங்களை செய்ய குழு ஒன்றையும் ஜே.ஆர். நியமித்திருந்தார். எனினும் எலினா அழுத்தங்களைக் கொடுத்து அதனைத் தடுத்து நிறுத்தினார். ரணசிங்க பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துமாறு எலினா ஜெயவர்தனவே ஜே.ஆருக்கு அழுத்தங்களைக் கொடுத்தார்.

எலினா ஜெயவர்தனவை போல், அரசியலில் இருந்து விலகுமாறும் தேசியப் பட்டியலில் நாடாளுமன்றத்துக்குச் செல்ல வேண்டாம் என ரணிலுக்கு அழுத்தங்களை கொடுக்க மைத்திரிக்கு முடிந்ததோ முடியாமல் போனதோ தெரியவில்லை.

**மைத்திரி விக்கிரமசிங்க அரசியலில் ஈடுபடாத அரசியல்வாதியின் மனைவி என்ற கதை உண்மையல்ல. 2015- 2019 ஆம் ஆண்டு வரையான அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளில் மாற்றங்கள் செய்வது சம்பந்தமான விடயங்களில் அழுத்தங்களை கொடுத்த சந்தர்ப்பங்கள் இருந்தன.**



**ஹிருணிகா மற்றும் மைத்திரி விக்கிரமசிங்கவின் பெண் விடுதலை**

ஹிருணிகா அவர்களின் வீட்டை முற்றுகையிட்ட போது, பொலிஸாரை வரவேண்டாம் என்று கூற அவருக்கு முடிந்திருக்கும். பொலிஸார், ஹிருணிகாவைத் துன்புறுத்தியபோது, அதனை அவர் தடுத்து நிறுத்தி இருக்கலாம்.

ஏன் அவர் அப்படி செய்யவில்லை என்பதை, இலங்கையின் பெண்கள் அமைப்புகள் மைத்திரி விக்கிரமசிங்கவிடம் கேட்க வேண்டும். இலங்கையில் பெண்களின் விடுதலை பற்றி பேசும் பல பெண்கள் அமைப்புகள் கொழும்பை மையமாக கொண்ட அமைப்புகள்.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி பெண்கள் அமைப்புகள் மைத்திரி விக்ரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தன. இந்தக் கடிதம் கொழும்பு டெலிகிராப் இணையத்தளத்தில் வெளியாகியது.

நாட்டின் மிகப் பெரிய கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை அழிக்க வேண்டாம் என ரணிலுக்கு அழுத்தங்களை கொடுக்குமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டிருந்தது. பெண்கள் அரசியலில் ஈடுபடும் உரிமை பற்றி பேசும் மைத்திரி விக்கிரமசிங்க, பெண்கள் அரசியலில் ஈடுபட இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியை அழிக்கவேண்டாம் என தனது கணவருக்கு அழுத்தம் கொடுக்குமாறு கூறப்பட்டிருந்தது.

மைத்திரி விக்கிரமசிங்க அரசியலில் ஈடுபடாத அரசியல்வாதியின் மனைவி என்ற கதை உண்மையல்ல. 2015 - 2019 ஆம் ஆண்டு வரையான அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளில் மாற்றங்கள் செய்வது சம்பந்தமான விடயங்களில் அழுத்தங்களைக் கொடுத்த சந்தர்ப்பங்கள் இருந்தன.

ரணில் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குச் செல்வதைத் தடுக்க முடியாது போயிருக்கலாம் என்று எண்ணினாலும் ஹிருணிகா உட்பட பெண்களுக்கு எதிராகப் பொலிஸாரைப் பயன்படுத்தி துன்புறுத்தும் போது அதனைத் தடுக்க மைத்திரி விக்கிரமசிங்கவுக்கு வாய்ப்பிருந்தது.

ஹிருணிகாவை கிண்டல் செய்யும் வகையில் சமூக ஊடகங்களில் அவரை அவமானப்படுத்தவேண்டாம் என ரணில் கூறியிருக்கலாம். இந்த விடயத்தில் மைத்திரி விக்ரமசிங்கவுக்கு பெண்களின் விடுதலையைவிட தனது கணவர் பெரிதாக தோன்றியிருக்கலாம். அதில் தவறும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புத்தர் சொல்லினும் நாய்வால் நிமிராது!

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட 'ஒரே நாடு, ஒரே சட்டம்' செயலணி, தனது பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகள் அடங்கிய பட்டியலை ஜனாதிபதியிடம் கையளித்திருக்கின்றது. கொஞ்சம்கூட ஈவிரக்கம் இல்லாமல் முற்றுமுழுதாக சிறுபான்மை மக்களை அதிலும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்ததாக அமைந்துள்ளன அந்தச் செயலணியின் பரிந்துரைகள். முஸ்லிம் சமூகத்தின் நம்பிக்கைகள், கலாசாரங்கள், விழுமியங்கள், மதஅனுட்டானங்கள் என்பனவற்றை முற்றுமுழுதாகவும் மிக மோசமான வகையிலும் வேட்டையாடுவதற்கு எத்தனித்திருக்கின்றது 'ஒரே நாடு: ஒரே சட்டம்' என்று பிதற்றிக்கொள்ளும் அந்தச் செயலணி.

பொது இடங்களில் முழுமையாக முகத்தை மூடும் வகையில் ஆடை அணிவதற்கு தடை விதிக்கவேண்டும், விற்பனை நிலையங்களில் ஹலால் பொருள்களுக்கு வேறு பிரிவொன்றை ஆரம்பிக்க வேண்டும், மொழி, இனம் என்ற அடிப்படையில் அரசியல் கட்சிகளை பதிவுசெய்ய அனுமதி வழங்கக்கூடாது என்றவாறாக நீள்கின்றது பரிந்துரைப் பட்டியல்.

முகத்தை மூடும் வகையிலான ஆடைகள் என்பன முஸ்லிம்களின் கலாசாரத்துடன் இப்போது இரண்டறக் கலந்துவிட்டவை. தமிழர்களுக்குத் தாலியும் சிங்களவர்களுக்கு ஒசரியவும் எப்படியோ அப்படித்தான் முஸ்லிம்களுக்கு முகத்தை முழுவதுமாகவும், பகுதியளவிலும் மறைக்கின்ற ஆடைகள் தற்போது மாறியிருக்கின்றன. ஆரம்பத்தில் முகத்தை முழுவதுதுமாக மூடும் ஆடைகளை பெருமளவான முஸ்லிம் பெண்கள் அணியாவிட்டாலும்கூட, சில தசாப்தங்களாக அவர்கள் இத்தகைய கலாசாரம் ஒன்றுக்குள் புகுந்துவிட்டார்கள். அதை அவர்கள் ஆத்மார்த்தமாக நம்புகின்றார்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள். ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்ற காலப்பகுதிகளில் முகத்தை மூடும் ஆடைகளுக்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டபோது, 'மாஸ்க்'கை வைத்து (கொரோனாவுக்கு முன்னர்) தமது முகத்தை அவர்கள் மறைத்திருந்தனர். ஆக, தற்போது அப்படியொரு கலாசாரத்தில் கைவைப்பதென்பது அந்தச் சமூகத்தின் கலாசாரத்தில் கைவைப்பதற்கு ஒப்பானதும் பாரதூரமான விடயமுமாகும். இன அழிப்புக்கு மேலதிகமான 'நன்கு திட்டமிட்ட பொறிமுறைகளுடன்கூடிய' கலாசார அழிப்பையும் சிங்களம் மேற்கொள்ள எத்தனிக்கின்றது என்பதையே இந்தப் பரிந்துரை காலக்கண்ணாடியாக எண்பிக்கின்றது.

சிறுபான்மை மக்களைப் பிரதிநித்துவம் செய்யும் 90 சதவீதமான கட்சிகள் இனம், மொழி என்பனவற்றைக் கொண்டுதான் தம் கட்சிக்ளின் பெயரை வடிவமைத்துள்ளன. அந்தப் பெயர்கள்தான் தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் மனங்களில் ஆழமாக ஊடுருவியிருக்கின்றன. இப்படியிருக்கையில் அந்தக் கட்சிப் பெயர்களை நீக்கம் செய்வதன்மூலம் தேசியக் கட்சிகளின் திணிப்பை தமிழர் தாயகத்திலும் முஸ்லிம் சமூகத்திலும் புகுத்திவிடலாம் என்ற பேரினவாதத்தின் பிற்போக்கானதும் உச்ச அராஜகத்தன்மை மிக்கதுமான சிந்தனையின் வெளிப்பாடுதான் கட்சிப் பெயர்களில் உள்ள இன, மொழி அடையாள நீக்கம்.

இதில் ஆகப்பெரும் நகைப்புக்குரிய விடயம் என்னவென்றால், எரிபொருள் இல்லை என்று கட்டார் உள்ளிட்ட மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளிடம் மடிப்பிச்சை ஏந்தி நிற்கும் சமநேரத்தில் அதே முஸ்லிம் நாடுகள் தமது உயிர்மூச்சாகக் கருதும் ஆடைகளையும் அவர்களின் உணவு முறைகளையும் சவாலுக்கு உட்படுத்தியிருக்கின்றது கோத்தாபய அரசாங்கம். அதாவது ஒரு குடும்பத்தின் இளைய சகோதரனைக் கொன்றுவிட்டு மூத்த சகோதரனிடம் சென்று உதவிகள் கேட்பதற்கு ஒப்பான செயலிது. எனில், எந்த நம்பிக்கையில் இவர்களுக்கு எரிபொருள் வழங்க வேண்டும் என்ற சிந்தனை மத்திய கிழக்கு நாடுகளிடம் ஏற்படும் என்று எதிர்பார்க்கின்றார்கள்? இதுதான் இவர்களின் அறிவுமட்டம். இதுதான் இவர்களின் இராஜதந்திரத்தின் சீத்துவக்கேடு.

சர்வதேச வர்த்தகப் பிணைப்பை, சர்வதேச உறவுகளை தக்க வைக்கவோ - பலப்படுத்தவோ - புதுப்பிக்கவோ தெரியாத முட்டாள்கள் அதிகாரக் கதிரைகளில் சூழ்ந்திருக்கும் இந்த அவலம் இப்போதைக்கு முற்றுப்புள்ளி காணாது என்பதற்கு 'ஒரே நாடு: ஒரே சட்டம்' செயலணியும் அதன் பரிந்துரைகளும் ஆகப்பிந்திய சான்றுகள்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை உரிய மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் விடுதலை செய்ய வேண்டும் என்ற தமிழர்களின் நெடுநாள் கோரிக்கை இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருக்கின்றமை ஒரு சாதகமான அம்சம். அதை வரவேற்கத்தான் வேண்டும். ஆனால், முஸ்லிம்கள் இரையாக்கப்படுவதற்கு எதிராக தமிழர்கள் மௌனித்திருக்கவேண்டும் என்பதற்காகவே இந்தப் பரிந்துரை இடம்பெற்றுள்ளதா(?) என்றும் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

நாளொரு நல்வார்த்தை

"நல்ல ஒழுக்கம் என்பது உனக்கு நீயே அளித்துக் கொள்ளும் நன்மதிப்பாகும்" - பெர்னாட்ஷோ



# 32 லட்சம் குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் நிவாரணம்

கொழும்பு, ஜூலை 2

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவில் பொருளாதாரம் நலிவடைந்த 32 லட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.



இந்தத் திட்டம் இம்மாதம் தொடங்கி அடுத்த ஆறு மாதங்களுக்கு செயற்படுத்தப்படவுள்ளது.

இதன்போது ஒவ்வொரு குடும்பத்துக்கும் அதிகபட்சமாக தலா 7ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நிவாரணம் கையளிக்கப்படவுள்ளது.

உலக வங்கி 200 மில்லியன் அமெரிக்க டொலரையும் ஆசிய அபிவிருத்தி வங்கி 200 மில்லியன் டொலரையும் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ள நிலையில் குறித்து தொகை நிவாரணத் திட்டத்துக்கு பயன்படுத்தப்படவுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# டீசல் வழங்க ஐ.ஓ.சி. இணக்கம்

கொழும்பு, ஜூலை 2

மின் உற்பத்திக்காக எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்துடன், இலங்கை மின்சாரசபை நேற்று நடத்திய பேச்சு வெற்றியளித்துள்ளதென பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மின் உற்பத்திக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

'லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மனோஜ் குப்தாவுடன் சந்திப்பு இடம்பெற்றது. மின் உற்பத்திக்கு அவசியமான 7 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருளை வழங்க இணக்கம் காணப்பட்டது' என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ஒ-இ)

03.07.2022
ஞாயிற்றுக்கிழமை
ஆனி 19

சுபநேரம் : 08.57 - 10.27
ராகுகாலம்: 04.27 - 05.57
சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று 23 ஆவது அகவையில் | கடந்த 22 ஆண்டுகளில்

திடமான
காலடிகளை
எடுத்து வைக்கும்
நாம்,
இவ்வேளையில்
வடக்கின்
தனிப்பெரும்
அச்சகதாரர்களாக
எம்மை
வளர்த்தெடுக்க
உதவிய
பணியாளர்கள்,
வாடிக்கையாளர்கள்,
நலன் விரும்பிகள்
அனைவருக்கும்
எம்
நெஞ்சம் நிறைந்த
நன்றிகளைக்
காணிக்கை
ஆக்குகிறோம்.

எமது கலைக்களஞ்சியமான
அச்சகப் பாசறையில்
அச்சு ஊடக வல்லுநர்களாக
பயிற்றுவிக்கப்பட்ட
நம் பணியாளர்களே
இன்று வடக்கின்
அச்சு ஊடகங்கள் தோறும்
பணியாற்றுவது மட்டுமன்றி,
புதிய அச்சு ஊடகங்களையும்
உருவாக்கியுள்ளார்கள்
என்பதையிட்டு பெருமகிழ்வுறும்
நாம் தொடர்ந்தும் சர்வதேச
பயிற்றுவிப்பாளர்களால்
அச்சகப் பணியாளர்களின்
தொழில்திறனை விருத்தி செய்து
சர்வதேச ரீதியில்
தடம் பதித்து அச்சுக் கலையை
வளர்த்தெடுத்துள்ளோம்.

## 02-07-2022 புதிய தசாப்தத்தில்

## நெறியாள்கை தொழில்நுட்பம் பரிணாமம்

# கரிகணன்

## வடக்கின் அச்சகதாரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்கள் எண்ணத்தை பிறரால் புரிந்து கொள்ள மாட்டார்கள். குடும்பத்திலும் பிரச்சினையை சந்திப்பீர்கள். எதிர்பார்த்தவற்றில் ஏமாற்றம் அடைவீர்கள். உதவி புரிவதாக சொன்னவர்கள் விலகிச் செல்வர்.

**இடபம்:** உங்களுடைய ஆலோசனைக்கு மதிப்பு உண்டாகும். பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள். செயல்களில் இருந்த நெருக்கடி விலகும். நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மிதுனம்:** எதிர்பாராத நஷ்டங்கள் உண்டாகலாம். நிதானித்து செயற்படுவது நல்லது. செலவுகள் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனமும் எச்சரிக்கையும் தேவை.

**கடகம்:** மனம் மகிழும் வகையில் சம்பவம் நடைபெறும். திட்டமிட்டு செயற்பட்டு லாபம் காண்பீர்கள். சிந்தித்து செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். செலவுகள் கட்டுப்படும். எதிர்பாராத வரவு உண்டாகும்.

**சிம்மம்:** எதிர்பாராத செலவுகளால் சங்கடப்படுவீர்கள். திட்டங்கள் தீட்டி செயற்படுத்த முயற்சிப்பீர்கள். தொழிலில் எதிர்பார்த்த நன்மை கிடைக்காது. உங்கள் கவனம் இன்று தடுமாறும்.

**கன்னி:** எண்ணம் இன்று நிறைவேறும். வீட்டைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பணவரவு கூடும். கனவுகள் இன்று நிறைவேறும். எதிர்பாராத பணவரவால் சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள்.

**துலாம்:** திட்டமிட்டு தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். வேலை தேடும் முயற்சியில் தீவிரமாவீர்கள். குலதெய்வ வழிபாட்டால் எண்ணம் நிறைவேறும். உற்சாகத்துடன் செயற்பட்டு வருவீர்கள்.

**விருச்சிகம்:** பிரச்சினைகள் இன்று முடிவுக்கு வரும். குருவருளால் நினைத்தவற்றில் வெற்றி காண்பீர்கள். தடைகளைத் தாண்டி சாதிப்பீர்கள். மற்றவர்களால் முடியாத ஒன்றை நீங்கள் முடித்துக் காட்டுவீர்கள்.

**தனுசு:** நிதானம் அவசியம். யோசித்து செயற்படுவதால் சங்கடங்கள் ஏற்படாமல் போகும். தாய்வழி உறவுவிஷயத்தில் சங்கடத்தை சந்திப்பீர்கள். எதிர்பார்த்ததை அடைய முடியாமல் போகும்.

**மகரம்:** புதிய பொருள் வாங்குவீர்கள். குடும்ப நலனில் கவனம் செல்லும். மகிழ்ச்சியான நாள். தம்பதிகளுக்கிடையே பிரச்சினை தீரும். சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள்.

**கும்பம்:** எதிர்ப்பை முறியடித்து சாதிப்பீர்கள். முயற்சி வெற்றி பெறும். உங்கள் நிலை உயரும். குடும்பத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். அலட்சியம் செய்தவர்கள் இன்று உங்களைப் பாராட்டுவர்.

**மீனம்:** வேலைப்பளு அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். பணியாளர்களுக்கு புதிய சுமை உண்டாகும். பணியில் கவனம் செலுத்த முடியாமல் போகும். உறவுகளால் சங்கடத்துக்கு ஆளாவீர்கள்.

# இஸ்ரேல் நாடாளுமன்றம் நேற்று கலைக்கப்பட்டது

*3 ஆண்டுகளில் 5ஆவது தேர்தலை சந்திக்கிறது*



ஜெருசலேம்,ஜூலை 2

**ஆளும் அரசு பெரும்பான்மையை இழந்ததால் இஸ்ரேலில் நாடாளுமன்றம் அதிகாரபூர்வமாக கலைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து இஸ்ரேல் மூன்றே ஆண்டுகளில் 5ஆவது பொதுத் தேர்தலை எதிர்நோக்கியுள்ளது.**

மத்திய கிழக்கு நாடான இஸ்ரேல் நாட்டில், கடந்த 4 ஆண்டுகளாக அரசியல் ஸ்திரமற்ற நிலை நிலவி வருகிறது.

இந்த நிலையில் இஸ்ரேலில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான சட்டம் கடந்த ஜூன் 22 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டு நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது பெரும்பான்மையை இழந்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தற்போதைய பிரதமர் நாஃப்டாலி பென்னட் பதவி விலகவுள்ளார்.

அத்துடன் அடுத்த தேர்தலில் தான் போட்டியிடமாட்டேன் எனவும் அவர் அறிவித்துள்ளார். தற்போதைய ஆட்சிப் பொறுப்பைக் கூட்டணிக் கட்சித் தலைவரும் வெளியுறவுத்துறை அமைச்சருமான யாயிர் லபீடிடம் அவர் ஒப்படைக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி நடைபெறும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை அங்கு சித்தாந்த ரீதியில் மாறுபட்ட கொள்கைகளைக் கொண்ட கட்சிகளின் கூட்டணியை வைத்துக் கொண்டு, 12 ஆண்டுகள் பிரதமர் பதவி வகித்தவர் பெஞ்சமின் நெத்தன்யாகு.

வரும் தேர்தலில் மீண்டும் ஆட்சியைப் பிடிக்கத் திட்டமிட்டுள்ளார் என இஸ்ரேல் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# உக்ரைனுக்கு அமெரிக்கா மேலும் ரூ.800 மில். இராணுவ உதவி

வொஷிங்டன், ஜூலை 2

உக்ரைனுக்கு மேலும் 800 மில்லியன் டொலர் மதிப்புள்ள ஆயுதங்களை வழங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

ஸ்பெய்ன் தலைநகர் மட்ரிட்டில் நடைபெற்ற நேட்டோ உச்சி மாநாட்டில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது எதிர்ப்பு ரொக்கெட்டுகள், பீரங்கி மற்றும் பிற ஆயுதங்கள் கையளிக்கப்படவுள்ளன.

உக்ரைனுக்கு மேற்கத்தேய நாடுகள் தொடர்ந்து ஆதரவு அளிக்கும். ரஷ்யா இந்தப் போரில் வெற்றிபெறாது என்று பைடன் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# இளைஞரின் வயிற்றில் 233 நாணயங்கள்!

துருக்கி மருத்துவர்கள் அதிர்ச்சி

அங்காரா, ஜூலை 2

துருக்கியில் நோயாளி ஒருவரின் வயிற்றிலிருந்து மருத்துவர்கள் சுமார் நூற்றுக்கணக்கான நாணயங்கள், நகங்கள் மற்றும் பற்றரிகள் என்பவற்றை மீட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


துருக்கியில் 35 வயதான நபர் ஒருவர் வயிற்றுவலி காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவரை மருத்துவர்கள் சோதனை செய்து பார்த்தபோது பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

அந்த நோயாளியின் வயிற்றில் 233 நாணயங்களும், ஏராளமான நகங்களும், பற்றரிகளும், கற்களும் கண்டறியப்பட்டன.

இதனையடுத்து அவருக்கு நடத்தப்பட்ட அறுவை சிகிச்சையில் அவரது வயிற்றிலிருந்து அனைத்து பொருள்களையும் மருத்துவர்கள் நீக்கியுள்ளனர். மேலும் அவர் நலமாக உள்ளார் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)





# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்

மணிலா, ஜூலை 2

வடக்கு பிலிப்பைன்ஸில் உள்ள ககாயன் மாகாணத்தில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.0 ஆக பதிவானதாக பிலிப்பைன்ஸ் எரிமலை மற்றும் நிலஅதிர்வு ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# மீண்டும் கொரோனா தலைதூக்குகின்றது

உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு

ஜெனிவா, ஜூலை 2

இந்தியா உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகரித்து வருகிறது என உலக சுகாதார அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் தெரிவித்ததாவது:


கொரோனாப் பெருந்தொற்று மாறி வருகிறது. ஆனால் முடிவுக்கு வந்துவிடவில்லை.

கொரோனாவின் மரபணு பரிணாமத்தைக் கண்காணிக்கும் திறன் அச்சுறுத்தலில் உள்ளது.

பல நாடுகள் கொரோனாத் தொற்று பாதிப்பு கண்காணிப்பு மற்றும் வரிசைப்படுத்தல் முயற்சிகளைத் தளர்த்தியுள்ளன.

உலகளவில் 120 கோடிக்கும் அதிகமான தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. ஆனால் ஏழை நாடுகளில் தடுப்பூசி போடும் வீதம் 13 சதவீதமாகத்தான் இருக்கிறது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















ஆசிரியருக்கான கடிதம்

# இந்திய - இலங்கை '1987' ஒப்பந்தப்படி ஈழத்தமிழருக்கான மனிதாபிமான மீட்பு

இலங்கை அரசை வீழ்த்த எடுக்கும் சர்வதேச வியூகங்களுக்குத் தமிழர்கள் துணைபோதல் மீண்டும் தமிழர் வாழ்வியலில் துயரத்தை ஏற்படுத்தும்.

தற்போதைய பொருளாதாரப் பேரிடர் நேரத்தில் இந்திய அரசிடம் இருந்து மனிதாபிமான உதவிகளை இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு நேரடியாக வழங்குவதற்கு 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் இராஜதந்திர வலிமை உள்ளது. மேலும் உணவு இன்மை, எரிபொருள் இன்மை, வேலை வாய்ப்பின்மை என்பவற்றினால் அபயம் தேடி தமிழகத்திற்கு அகதிகளாகச் செல்லும் நிலைமை அதிகரித்தால் அது தமிழகத்தில் நெருக்கடியினைத் தோற்றுவிக்கும். இலங்கையில் அரசியல் குழப்பங்கள் அதிகரித்து அதிக அளவில் மக்கள் தென்னிந்தியாவிற்குச் செல்லும்போது இயல்பாகவே இந்தியாவின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும்.

இந்தியாவின் வடமாநிலங்களில் குறிப்பாக தீபெத், பங்களாதேஸ், மியான்மார் போன்ற நாடுகளில் இருந்து அகதிகள் வருவதுபோல் ஒரு சூழலை தமிழகத்தில் ஏற்படாது இருப்பதற்கு இந்தியா இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நேரடியாகவே மனிதாபிமான மீட்புவேலைத் திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

எமது கடந்த 30 வருடகால சமூக உள அனுபவத்திலிருந்து எதிர்வரும் காலத்துக்கான சமூக உளப்பாதுகாப்புக்கு இந்தியாவின் இராஜதந்திர நகர்வு மிகவும் அவசியமானதாகும்.

மருத்துவர் சி. யமுனாநந்தா

# விவசாய அதிகாரிகளுக்கு வதிவிடங்களில் இடமாற்றம்

## விவசாய அமைச்சர் ஆலோசனை

கொழும்பு, ஜூலை 2

அனைத்து விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அதிகாரிகளையும் அவர்களின் நிரந்தர வதிவிடங்களில் இடமாற்றம் வழங்குவதற்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவால் கமநல சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வாரம் இந்தியக் கடனுதவியின் கீழ் ஓமானிலிருந்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா பசளை நாட்டை வந்தடையவுள்ளது. அதனையடுத்து மேலும் 25 ஆயிரம் மெற்றிக்தொன் பசளை கிடைக்கப்பெறவுள்ளது.

இது விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேயருக்கு தலா 100 கிலோகிராம் வீதம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இந்தப் பணியை விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்புடன் முன்னெடுக்கும் நோக்கிலேயே அவர்களுக்கு இந்த இடமாற்றங்களை வழங்குமாறு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார் (ச-இ)

## கந்தக்காடு மறுவாழ்வு நிலையம்

# 726 கைதிகள் தப்பியோட்டம்; இதுவரை 599 பேர் சிக்கினர்

வெலிக்கந்தை - கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பிச் சென்ற 726 கைதிகளில் இதுவரை 599 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் 127 பேரைத் தேடி தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் களுக்கு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு அளிக்கும் கந்தக்காடு முகாமில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இரு குழுவினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் கைதி ஒருவர் உயிரிழந்தார்.

இந்தப் பதற்ற நிலைமையைப் பயன்படுத்தி புனர்வாழ்வு பெற்றுவந்த 726 கைதிகள் தப்பிச் சென்றிருந்தனர்.

இந்த நிலையில் தப்பிச் சென்ற 726 கைதிகளில் 599 பேர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், ஏனையோரைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-22)

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை வெளியேற்றியமைக்குக் கண்டனம்

## சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தி

கொழும்பு, ஜூலை 2

காலிகோட்டையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை பலவந்தமாக வெளியேற்றியமை குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபருக்கும் இராணுவத் தளபதிக்கும் எழுதியுள்ள கடிதத்திலேயே, ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் விமர்சித்து காலி ... இராணுவத்தினரும் இணைந்து வெளியேற்றியமை கண்டனத்துக்கு உரியதென்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

காலிகோட்டையின் அரண்பகுதி பொதுமக்களுக்கான பகுதி. இதன் காரணமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அகற்றுவதற்கான காரணங்கள் இல்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

... உங்களுக்கு உள்ள பேச்சுச் சுதந்திரத்தை எதிர்ப்பை வெளிப் படுத்துவது உட்பட தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு உள்ள சுதந்திரத்தை பயன்படுத்த அனுமதிக்கவேண்டும் என்பதை நாங்கள் உங்களுக்கு தொடர்ந்து நினைவுபடுத்தியும் வலியுறுத்தியும் வருகின்றோம். எரிபொருள் பற்றாக்குறை அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாட்டால் மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ள நாட்டின் தற்போதைய நிலைக்கு, மக்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தீர்வை காண முடியாது என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையிலிருந்து தப்பியவர் அலைபேசித் திருட்டில் கைது!

பல குற்றச்சாட்டுக்களில் கைதாகி சிறையில் இருந்தவர் அண்மையில் தப்பித்துச்சென்ற நிலையில் அலைபேசி திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

சுழிபுரம் வழக்கம்பரைப் பகுதியில் அலைபேசிகள் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கடந்த புதன் கிழமை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட 20 வயதுடைய இளைஞர் வவுனியாவைச் சேர்ந்தவராவார். அவர் சுழிபுரத்தில் உள்ள தனது நண்பர் வீட்டுக்கு வந்திருந்தபோதே அலைபேசி திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து மூன்று அலைபேசிகள் கைப்பற்றப்பட்டன. இளைஞரை விசாரணக்குட்படுத்தியபோது ஏற்கனவே இரண்டு தடவைகள் சிறைத்தண்டனைக்கு உட்பட்டவர் என்பதுடன் மூன்றாவது தடவை இரண்டு வருடகால சிறைத்தண்டனை பெற்று வந்த நிலையில் 5 மாதங்களின் பின்னர் சிறையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் என்பது தெரியவந்தது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளின் பின்னர் இளைஞனை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14-27)

# யாழில் கடத்தப்பட்ட மாணவிக்கு நீதிகோரி ம.உ. ஆணைக்குழு முன்பாக போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

**யாழ்ப்பாணத்தில் இருந்து கடத்தப்பட்ட மாணவிக்கு நீதி கோரி யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

யாழிலிருந்து கடந்த மாதம் 24 ஆம் திகதி கடத்தப்பட்ட மாணவி, கிளிநொச்சியில் மீட்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் மாணவி மருத்துவமனையில் கடந்த புதன்கிழமை உயிரை மாய்ப்பதற்காக நோயாளர் விடுதியிலிருந்து கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

இந்த நிலையில் மாணவி கடத்தப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கையையும் இதுவரை முன்னெடுக்கரவில்லை என்று தெரிவித்து, அதற்கான நீதிகோரியே மாணவியின் குடும்ப உறவினர்கள், மாணவர்கள், அந்தப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது "சிறுவர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்", "கடத்தப்பட்ட மாணவிக்கு நீதி கிடைக்க வேண்டும்", "பாலியல் கொடுமைகள் தவிர்க்கப்பட வேண்டும்" போன்ற கோரிக்கைகளை உள்ளடக்கிய வாசகங்களுடன் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து குடும்ப உறவினர்கள் ஒன்றிணைந்து, தமது பிள்ளைக்கு நேர்ந்த வன்முறைக்கு நீதியை நிலைநாட்டவேண்டும் எனக் கோரி மனுவொன்றை யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவல ஆணையாளர் கனகராஜிடம் கையளித்தனர். (ஒ-14-125)

# ப.தெ.வ கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் கவனவீர்ப்பு

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை தமது சங்கத்துக்கு முன்னால் கடந்த புதன் கிழமை முன்னெடுத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஊழியர்கள், நாங்கள் மிகவும் குறைந்த வேதனமான 550 ரூபாவுக்கே தற்போது கடமையாற்றி வருகின்றோம். இந்தச் சம்பளத்தில் வேலை செய்து தற்போதைய பொருளாதார நெருக்கடி காலத்தில் எவ்வாறு எமது வாழ்க்கைச் செலவை ஈடுசெய்வது?

எமது கல்வித் தகைமைகளைக் காரணம் காட்டி எமக்கான நிரந்தர நியமனத்தை இழுத்தடிக்கின்றனர். எம்மை கடமைக்கு அமர்த்தும்போது எமக்கு நிரந்தர நியமனம் தருவதாகக் கூறித்தான் பணியில் அமர்த்தினார்கள். ஆனால் தற்போது வழங்க முடியாது என்று கூறுகின்றனர். 15 வருடங்களுக்கு மேலாகக் கடமை புரியும் பணியாளர்களுக்குக் கூட இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கவில்லை. இந்தக் கல்வித்தகைமையில் நிரந்தர நியமனம் வழங்க முடியாவிட்டால் எங்களைப் பணியில் அமர்த்தும்போதே அதைக் கூறியிருக்கலாம் தானே. இவ்வளவு காலமும் எங்களை ஏன் ஏமாற்றினார்கள்? எனவே எமக்கான சரியான தீர்வு கிடைக்கும் வரை தொடர்ந்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம். எமது பிரச்சினைகளை ஆளுநர் கருத்திற்கொண்டு எமக்கான சரியான தீர்வை வழங்கவேண்டும். நாங்கள் ஆளுநரைச் சந்தித்துப் பேசுவதற்கு அவர் எமக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும் -என்றனர். (ஒ-14-27)



# போசாக்கு உணவாக தினமும் பசுப்பால்

கொடிகாமம், ஜூலை 2

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் 422 மாணவர்களின் போசாக்கு உணவாக தினமும் பசுப்பால் வழங்குவதற்கான ஆரம்ப நிகழ்வு அதிபர் க.இளங்கோவன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ய-159)

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
அறநெறிப்பாடசாலை
நடாத்தும்
மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு
இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்
காலம் : 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணி
வைத்தீஸ்வரக்குருக்கள் அரங்கு நிகழ்ச்சிகள்
✣ திருவாசக தேனிசை
✣ சிந்தனைக்கு ஒரு விருந்து
✣ சொற்பொழிவு
✣ இசைக்கச்சேரி
✣ நாடகம்
✣ நாட்டியாஞ்சலி
✣ விவாத அரங்க போட்டி
குறிப்பு:- இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ் கிளையிலிருந்து பி.ப 1.30 க்கு ஆரம்பமாகும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.
கிழவன்காடு கலாமன்றம், யாழ்கிளை.

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்-கொக்குவில்
வருடாந்த மஹோற்சவம் - 2022 -
03.07.2022 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றம் (துவஜாரோகணம்)
அபிஷேகம் காலை 7.00 மணி
வசந்தமண்டபப் பூஜை காலை 8.30 மணி
கொடியேற்றம் பகல் 10.30 மணி
05.07.2022 செவ்வாய்க்கிழமை மஞ்சத் திருவிழா
வசந்தமண்டபப் பூஜை மாலை 5.00 மணி
இதனைத் தொடர்ந்து அம்பாள் மஞ்சத்தில் திருவீதியுலா.
09.07.2022 சனிக்கிழமை கைலாய வாகனத் திருவிழா
வசந்தமண்டபப் பூஜை மாலை 5:00 மணி
இதனைத் தொடர்ந்து அம்பாள் கைலாய வாகனத்தில் திருவீதியுலா.
11.07.2022 திங்கட்கிழமை சப்பறத் திருவிழா
வசந்தமண்டபப் பூஜை மாலை 5.00 மணி
இதனைத் தொடர்ந்து அம்பாள் சப்பறத்தில் திருவீதியுலா.
12.07.2022 செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா (இரதோற்சவம்)
அபிஷேகம் காலை 5.00 மணி
வசந்தமண்டபப் பூஜை காலை 6.30 மணி
இதனைத் தொடர்ந்து இதோற்சவம் நடைபெற்று, இரத அவரோகணம், பிராயச்சித்த அபிஷேகம், நவசக்தி அர்ச்சனை முதலியன நடைபெறும்.
13.07.2022 புதன்கிழமை தீர்த்தோற்சவம்
அதிகாலை 4.30 மணிக்கு கிரிஜைகள் ஆரம்பமாகி 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் நடைபெறும். மாலை 3.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், திருவூஞ்சலும்நடைபெற்று கொடியிறக்கம் (துவஜா அவரோகணம்) நடைபெறும்.
14.07.2022 வியாழக்கிழமை காலை 5.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று, மாலை 5.30 மணிக்கு பூங்காவனத் திருவிழா நடைபெறும்.
15.07.2022 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு விஷேட சங்காபிஷேகம் (108) நடைபெறும். பிற்பகல் 3.30 மணிக்கு தேரடி வைரவர் பொங்கலில் பொங்க விரும்பும் அடியார்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படும்.
தினமும் காலை 10.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை நடைபெறும்.
ஆலய பரிபாலன சபை

# மாணவர்களின் கல்விக்கு அனைவரும் தன்னார்வமாக ஒத்துழைப்பு வழங்குங்கள்

## கல்வி அமைச்சின் செயலாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 2

மாணவர்களின் கல்விக்கு அனைத்துத்தரப்பினரையும் தன்னார்வமாக ஒத்துழைப்பு வழங்குமாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வட மாகாண பாடசாலைகளைத் தொடர்ந்து நடத்திச் செல்வது தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை வடமாகாண ஆளுநருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன்போதே இவ்வாறு கோரிக்கை விடுத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆளுநருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் பாடசாலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதற்கமைய நடத்தக்கூடிய கிராமப்புற பாடசாலைகளை, வருகை தரக்கூடிய குறைந்தபட்ச ஆசிரியர்களைக் கொண்டு தொடர்ந்து நடத்துதல். ஏனைய அனைத்துப் பாடசாலைகளிலும் இந்த ஆண்டு க.பொ.த சாதாரண தர மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வகுப்புக்களை, சமுகமளிக்கக் கூடிய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் நடத்துதல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

எனவே மாணவர்களின் கல்விக்காக தம்மால் இயன்றளவு ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் தன்னார்வமாக வழங்குமாறு அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறேன் -என்றார். (ஒ-14-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன துவிச்சக்கரவண்டி ரூ.ஒரு லட்சத்தை எட்டியது

கொழும்பு, ஜூலை 2

**சாதாரண துவிச்சக்கரவண்டி ஒன்றின் விலை 50 ஆயிரம் ரூபாவைக் கடந்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன், புதிய வடிவிலான மற்றும் வெவ்வேறு தொழில்நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள், ஒரு இலட்சம் ரூபா வரையான விலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.**

எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில், கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள மக்கள் துவிச்சக்கர வண்டிகளையும், அதன் உதிரிப் பாகங்களையும் கொள்வனவு செய்யும் போக்கு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது.

துவிச்சகர வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக, நாட்டின் பல பாகங்களிலும் உள்ள துவிச்சக்கர வண்டி விற்பனை நிலையங்களை மக்கள் அதிகளவில் நாடுகின்றனர்.

மக்கள் துவிச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்வது அதிகரித்துள்ள சூழ்நிலையில், அதன் விலையும் அதிகரித்துள்ளது.

அதேநேரம், துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்களின் விற்பனையும் அதிகரித்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக, உதிரிப்பாகங்களின் விலையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)



கனடாவில் வசிக்கும் பிரபாகரன் துரிதாவின் மகனின் 2ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பூமணியம்மா அறக்கட்டளையின் தலைவர் லயன் கலாநிதி. நா.தனேந்திரனின் தலைமையில் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன. (ய)

# எரிபொருளை பதுக்கிய இரண்டு பேர் கைது

கொழும்பு, ஜூலை 2

பெருந்தொகை டீசலைப் பதுக்கி அதிக விலைக்கு விற்பனை செய்த இருவேறு இடங்களைச் சேர்ந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் பதுக்கி வைத்திருந்த டீசலும் மீட்கப்பட்டுள்ளது.

அரணாயக்க வெலிமன்ன பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 57 வயதுடைய சந்தேகநபர், வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 186 லீற்றர் டீசலுடன் கைது செய்யப்பட்டார்.

அதேபோன்று சபுகஸ்கந்த பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய சந்தேகநபர் 820 லீற்றர் டீசலுடன் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-இ)

# பொருள்கள் விற்பனையின்போது பின்பற்றப்படும் நடைமுறை மாற்றம்

## பாவனையாளர் அதிகாரசபையால் வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூலை 2

பொருள்களின் விற்பனையின்போது பின்பற்றப்பட வேண்டிய நிபந்தனைகளை திருத்தியமைத்து வர்த்தமானி அறிவித்தலை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை வெளியிட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இம்மாதம் 28ஆம் திகதி முதல் அனைத்து பொருள்களின் பொதிகளிலும் அதிகபட்ச சில்லறை விலை, எடை, அளவு, உற்பத்தி மற்றும் பொதியிடப்பட்ட திகதி, காலாவதி திகதி, உற்பத்தியாளரின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை இடம்பெறவேண்டும்.

அத்துடன் இறக்குமதி செய்யப்படும் பொருளுக்கு இறக்குமதியாளரின் விளக்கத்தை அச்சிடுவது அல்லது அழியாத லேபிள் மூலம் குறிப்பிடுவது கட்டாயமாகும்.

இந்த விடயங்கள் இன்றி எந்தவொரு பொருள்களையும் உற்பத்தி செய்யவோ, இறக்குமதி செய்யவோ, விற்பனை செய்யவோ, சேமித்து வைக்கவோ அல்லது விநியோகிக்கவோ முடியாது என அந்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கந்தக்காடு கலவரம் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 2

கந்தக்காடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஆணைக்குழுவின் குழுவொன்று நேற்றுமுன்தினம் மத்திய நிலையத்துக்குச் சென்றது.

இதேவேளை, தப்பியோடியவர்களில் 600இற்கும் அதிகமானவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தப்பிச் சென்ற பலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் சிலர் பொலனறுவை, மெதிரிகிரிய, பக்கமுன மற்றும் மின்னேரிய பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-இ)

# தேசபந்துவுக்கு எதிராக கர்தினாலும் போர்க்கொடி

கொழும்பு, ஜூலை 2

மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஆகியோருக்கு உத்தரவிடுமாறு கோரி கொழும்பு பேராயர் கர்தினால் ரஞ்சித் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இத்தாக்குதல்களை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை பரிந்துரைகளுடன் கடந்த ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி தற்போதைய ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில், பொலிஸ் மா அதிபரின் கீழ் இலங்கை பொலிஸில் பணியாற்றும் அதிகாரிகள் உட்பட பல அரச அதிகாரிகளின் கடுமையான அலட்சியம் மற்றும் குறைபாடுகள் பல கண்டறியப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சிசில குமார மற்றும் சிஐ சமிந்த நவரத்ன ஆகியோர் மீதான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மனுதாரர் தனக்குத் தெரிந்த வரையிலும் பொது வெளியில் உள்ள தகவல்களின் அடிப்படையிலும் தெரிவித்தார். (ஒ-இ)

# 177 பவுணுடன் திருடர்கள் கைது

கொழும்பு, ஜூலை 2

சுமார் 177 பவுண் தங்க ஆபரணங்களைக் களவாடிய 4 சந்தேகநபர்கள் ஹட்டன் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நோர்வூட் நகரில் உள்ள அடகு பிடிக்கும் நிலையம் ஒன்றில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி தங்க ஆபரணங்கள் களவாடப்பட்டிருந்தன.

இவற்றின் பெறுமதி 3 கோடியே 54 இலட்சம் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில், ஹட்டன் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளுக்கமைய, சுமார் 6 மாதங்களின் பின்னர் பெண் ஒருவரும் 3 ஆண்களுமாக 4 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ஒ-இ)

# முழங்காவில் எரிபொருள் நிலையத்துக்கு ஒருமாதமாக எரிபொருள் வழங்கவில்லை

கிளிநொச்சி, ஜூலை 2

முழங்காவில் எரிபொருள் நிலையத்துக்கு ஒருமாதமாக எரிபொருள் வழங்க வில்லை என அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் பூநகரி எரிபொருள் நிலையம், முழங்காவில் எரிபொருள் நிலையம் என்பன இயங்குகின்றன.


கடந்த ஒரு மாதத்தில் பூநகரி எரிபொருள் நிலையத்துக்கு இரு தடவைகள் எரிபொருள் கொண்டுவரப்பட்ட போதிலும் முழங்காவில் எரிபொருள் நிலையத்துக்கு எரிபொருள் கொண்டுவரப்படவில்லை.

ஒரே சங்கத்தின் கீழ் இயங்கும் இரு எரிபொருள் நிலையங்களில் ஒன்றுக்கு எரிபொருளை வழங்கி இன்னொன்றுக்கு எரிபொருளை வழங்காமல் விடுவது குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இதனால் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாரபட்சமாக நடந்து கொள்வதாகப் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தாமோதரம்பிள்ளை அரியரட்ணத்தை தொடர்புகொண்டபோது, தமது சங்கத்தின் கீழ் இயங்கும் எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் வழங்குவது குறித்து எமது சங்கம் தீர்மானிப்பதில்லை. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் குறித்த எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் வழங்குங்கள் என்று தீர்மானிக்கப்பட்டே எமது சங்கத்துக்கு எரி பொருள் அனுப்பப்படும். அதற்கமையவே அந்தந்த எரிபொருள் நிலையங்களுக்கு நாம் வழங்குவோம். தவிர எரிபொருள் வரும்வேளை நாம் பாரபட்சம் காட்டுவதில்லை எனத் தெரிவித்தார். (ஒ-14-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரணிப் பிரதேசத்துக்குட்பட்ட 19 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு லண்டன் செரண்டிப் சிறுவர் இல்லத்தால் உலர் உணவுப் பொருள்கள் ரீட்டா முன்பள்ளியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. (ய-159)




## காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு
பருத்தித்துறை வீதியில்
பிரதேச செயலகத்தின்
அண்மையில்
5 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

(CS 19859) (3.6)

074 292 5923



## விற்பனையாளர் தேவை

புடைவை விற்பனையில் அனுபவமுள்ள
அல்லது பழக விரும்பும் பெண் பிள்ளைகள்
தேவை.
**லைடன் புடைவை நிலையம்**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு
021 222 2381


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு
03 . 10 . 1932



இறப்பு
02 . 06 . 2022

### அமரர் வேதாரணியம் தெய்வானை

கடந்த 02.06.2022 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி அமரர் வேதாரணியம் தெய்வானை அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் கடந்த 30.06.2022 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலைக் கடற்கரையிலும் இன்று (02.07.2022) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து, அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**6/10 விதானையார் வீதி,**
**ஈச்சமோட்டை,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு
07 - 05 - 1933



உதிர்வு
01 - 07 - 2022

### விநாசித்தம்பி யோகாம்பிகை

வத்திராயன் மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும், மாமுனை செம்பியன்பற்றை நிரந்தர வதிவிடமாகவும், கிளிநொச்சி ஆனந்தபுரம் மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி யோகாம்பிகை நேற்று (01.07.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு வள்ளிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விநாசித்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், சீதாலட்சுமி (ஓய்வுநிலை பிரதி விவசாயப்பணிப்பாளர்- கிளிநொச்சி), சுந்தரலிங்கம் (வர்த்தகர் - கிளிநொச்சி), தர்மகுலசிங்கம் (ஓய்வு நிலை, அபிவிருத்தி உத்தியோகத்தர்- பளை), இரத்தினேஸ்வரி, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தராசா (காலஞ்சென்ற ஆசிரியர்), அன்னக்கிளி, யோகாம்பிகை, இரத்தினசிங்கம், நாகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகந்தி, சுதாகரன், துஷ்யந்தி, தக்சாயினி, தயானி, தர்சினி, இந்துமதி, இளமதி, கோபிநாத், கீர்த்திகா, சஞ்சீவன், பிரேம்நாத், பிரசன்னா, ஆகியோரின், பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2022) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கிளிநொச்சி திருநகர் இந்து பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**077 883 6845**

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 951) (3.6)



## கண்ணீர் அஞ்சலி



### அமரர் வடகோவை பூ.க. இராஜரட்ணம்

எமது கல்லூரியின் ஓய்வுநிலை அதிபரும் கொழும்பு கிளை பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமாகிய அமரர் வடகோவை பூ.க இராஜரட்ணம் அவர்கள் கடந்த 11.06.2022 அன்று லண்டனில் இறைபதம் அடைந்தமையிட்டு கல்லூரிச்சமூகம் சார்பில் கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம் - தலைமையகம் கோப்பாய்**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை (கீன்பண்டா) அன்னலட்சுமி (சின்னமணி)

இல.47 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை சேர்ந்த வேலுப்பிள்ளை (கீன்பண்டா) அன்னலட்சுமி (சின்னமணி) நேற்று (01.07.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் செல்லம்மாவின் ஏக புத்திரியும் வேலுப்பிள்ளை (கீன்பண்டா) அவர்களின் பாசமிகு மனைவியும் அனுசியா (ஆசிரியை), யசோதா, விஜயா (முகாமையாளர் - ப.நோ.கூ.ச), சேந்தன் (கிராம அலுவலர் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்), கார்த்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும் சரத், பரமேஸ்வரன், ரூபவாகினி, பகீரதன் ஆகியோரின் மாமியாரும் சர்மிளா, றொஷானி, தாருகா, துஷாந்தி, யானுஷா, யதுர்ஷன், நிலவேந்தன், தேனுஜா, சாருஜன் ஆகியோரின் பேர்த்தியும் பிரனுகன், டினுஜன், கஸ்மிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மகன் :- 077 880 0847**
**மகள் :- 077 976 1055**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## ஓட்டோ சேவை முடங்கும்

### சாரதிகள் கவலை

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலை காரணமாக ஓட்டோக்களுக்கு எரிபொருள் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குறுகிய காலத்தில் ஓட்டோ சேவை முடங்கும் என்று ஓட்டோ சாரதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஒரு வார காலமாக தமக்கு எரிபொருள் கிடைக்காத தால் ஓட்டோசேவை முற்றாக முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தமது நாளாந்த வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது என்று அவர்களால் தெரிவித்தனர்.

பல சாரதிகள் லீசிங்கில் வாங்கிய ஓட்டோக்களுக்கு லீசிங் பணத்தைக் கட்டமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். அத்துடன் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் பணியும் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதால் மாணவர்கள் பலரின் கற்றல் நடவடிக்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் எவ்வாறு எமது வாழ்வாதாரத்தை நடத்த முடியும்? எனவே ஓட்டோ சேவை முடங்கு வதற்கு முன் ஓட்டோ சாரதிகளுக்கும் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14,113)

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கைதடி, நாவற்குழி போன்ற இடங்களில் உள்ள காணிகள் பிரிவிடல் செய்யும் போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் (U.D.A) 2235/54 ஆம் இலக்க 2021.07.08 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் விதி முறைகளின் உபபிரிவிடுகை (109A) இற்கு அமைவாக பிரிவிடல், செய்யப்பட்டு முறையான அனுமதி பெறப்பட வேண்டும். எனவே காணி தொடர்பாக பிரதேசசபை யின் முறையான பிரிவிடல் அனுமதி பெறப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தி காணிகளை கொள்வனவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுவதுடன் எதிர்காலத்தில் காணிகள் தொடர்பில் ஏற்படும் சிரமங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 13.05.2022 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் அப்பாப்பிள்ளை சிவப்பிரகாசம்

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (02.07.2022) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் திருவடி நிலை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் பூர்வீக இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


மேலும் அன்னாரின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு துண்டுப் பிரசுரம், மலர்வளையம், பதாகைகள் மூலம் துயர்பகிர்ந்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதான வீதி,
பண்ணாகம், சுழிபுரம்.

அன்னாரின் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 19860) (3/6)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை நந்தீஸ்வரர்

(முன்னைநாள் கட்டட திணைக்கள
யாழ். மாவட்ட பொறியியலாளர், புகழ்பூத்த மகாஜனன்)

யாழ். பன்னாலையைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நந்தீஸ்வரர் கடந்த (27.06.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான Dr.சபாரட்ணம் - சிவஞானரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெகரட்சினி அவர்களின் அன்புக் கணவரும், பிரணவன்(Bell Canada), காலஞ்சென்ற வித்தகன்,Dr. சித்தகன், Dr. விழுத்தன், Dr. பவித்ரா (Sandhurst Family dental clinic) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜபாலினி, சாந்தலதா, சுபாசினி, தயாளன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவஞானமலர், காலஞ்சென்ற பாக்கியலீலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஜெகஜெனனி, ஜனார்த்தனகுமார், காலஞ்சென்றவர்களான விஸ்வநாதன், சாந்தினி மற்றும் சிறிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சிவலிங்கம் அவர்களின் அன்புச் சகலனும், அட்சயா அகரன், ராஜி, கார்த்தி, மகி, மாறன், வேந்தன், காவியன், தீரன், டிலன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (03.07.2022) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நேரலை http://www.ustream.tv/channel/chapelridgefh2 ல் 03/07/2022 (ஞாயிறு) பார்வை நேரம் 2.30 AM to 6.30 AM & கிரியை நேரம் 10.30 PM to 1.00AM (இலங்கை நேரம்)

Mobile:+14164969595

தகவல்:
குடும்பத்தினர்

(cs 19869) (2/6)

# மரண அறிவித்தல்



வரவு
23.01.1943

பிரிவு
28.06.2022

## எஸ்.ஏ.ஈ.ஏகநாதன்

(ஓய்வு நிலை மாவட்ட நீதிபதியும்,
சிரேஷ்ட சட்டத்தரணியும்)

திரு.எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் கடந்த (28.06.2022) செவ்வாய்க் கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் நயினாதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி - சிவபாக்கியம் தம்பதியரின் ஏக புதல்வரும், காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற நல்லதம்பி - விஜயலக்ஷ்மி தம்பதியரின் மருமகனும், சகுந்தலாதேவியின் கணவரும், சிவானந்தா, காலஞ்சென்ற விஜயானந்தா மற்றும் ஜெயந்தி சிவநாதன், வருணானந்தா, விஜயபவானந்தா ஆகியோரின் தந்தையும், கௌரீஸ்வரி சிவானந்தா, முத்துக்குமாரு சிவநாதன், தவநாயகி வருணானந்தா, டிலக்ஷா விஜயபவானந்தா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான காமாட்சி பரமலிங்கம், சிவகாமசுந்தரி சதாசிவம், வாலாம்பிகை அருள்லிங்கம், பராசக்தி சிவநாதன் ஆகியோரின் இளைய சகோதரனும், காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் சபாநாதன், ஸ்ரீகாந்தா, உஷாதேவி செல்வரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், சித்தரஞ்சன் (கனடா), சிந்துராரணி (கனடா), நந்தகோபன் (இங்கிலாந்து), சாய்சங்கர் (இங்கிலாந்து), சாயினி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர் நீலிப்பந்தனையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நாளை (03.07.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் ஆரம்பமாகி, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் காரைநகர் கசூரினா கடற்கரை அருகில் உள்ள சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்: ந.ஸ்ரீகாந்தா - சட்டத்தரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருந்து இல்லை

# லொறியில் பயணித்த மாணவர்கள் விபத்து!

## 13 பேர் மருத்துவமனையில்

கொழும்பு, ஜூலை 2

பேருந்து இல்லாத காரணத்தால், லொறி ஒன்றில் பயணித்த மாணவர்கள் லொறியின் தட்டு உடைந்து விழுந்ததில் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் கலன்பிதுனுவெள பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த லொறியில் 37 மாணவர்கள் பயணித்துள்ளனர் என்றும், பேருந்துச் சேவை மிகவும் குறைந்தளவில் இயங்கும் அந்தப் பகுதியில் உள்ள பெரும்பாலான மாணவர்கள் இவ்வாறான உயிராபத்தான பயணங்களை மேற்கொண்டே குறித்த பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்கின்றனர் என்றும் அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

### சர்வகட்சி...

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு மகாநாயக்க தேரர்கள் அவசரக் கடிதமொன்றை நேற்று அனுப்பியுள்ளனர். அந்தக் கடிதத்திலேயே பொருளாதார உறுதித்தன்மையை உருவாக்குதல், மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுதல் மற்றும் நேர்மையான சர்வகட்சி அரசை உடனடியாக அமைத்தல் உள்ளிட்ட 10 விடயங்களை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நிர்வாக முரண் நடவடிக்கையால் இலங்கை, வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத பொருளாதாரப் பின்னடைவுக்குள் தற்போது தள்ளப்பட்டுள்ளது. அத்துடன் எரிபொருள்களின் இருப்பு முற்றாகத் தீர்ந்து செயற்கை முடக்கம் ஒன்றுக்குள் நாடு தற்போது தள்ளப்பட்டுள்ளது. இதனால் அரசாங்கத்துக்கு எதிர்ப்புகளும், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களும் தீவிரம் பெற்றுள்ளன. அரசாங்கம் சர்வதேசத்தின் நம்பிக்கையை இழந்துள்ளதால் இலங்கைக்கு இனிவரும் நாள்களில் சர்வதேச உதவிகள் கிடைக்காது என்றும் இதனால் கோத்தாபய அரசாங்கம் உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. இத்தகைய பின்னணியிலேயே மகாநாயக்க தேரர்களால் 10 அம்சங்களை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (அ-ம-22)

### ஆட்கொணர்வுத்...

இறுதிப் போரில் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அனந்தி சசிதரன் உட்பட்டோரால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நேற்று வழங்கப்படவிருந்த நிலையிலேயே, செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி குறித்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும் என்று தவணையிடப்பட்டுள்ளது. (அ-ம-110)

### விமானசேவை...

குற்றஞ்சாட்டியுள்ளார்.

காக்கைதீவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் எரிபொருள் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. விமானங்கள் இங்கு வந்துவிட்டு திரும்பிச் செல்வதற்கு எரிபொருள் இல்லை. அத்துடன் இந்தியாவில் இருக்கக்கூடிய சில சட்டச் சிக்கல்கள் காரணமாகவும் இந்தக் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் இந்த விமான சேவைக்கு தனது பூரணமான ஒத்துழைப்பினையும் அங்கீகாரத்தினையும் வழங்குகிறது. இந்த சிக்கல்கள் விரைவில் தீர்க்கப்பட்டு இந்த விமான சேவைகள் தொடரும் - என்றார். (அ-ம-27)

### கண்துடைப்புக்கு...

கின்றது.

கோத்தாபய அரசாங்கத்தால் மூடப்பட்டிருந்த யாழ்ப்பாணம் விமான நிலையம் ஜூலை முதலாம் திகதி முதல் செயற்பட ஆரம்பிக்கும் என்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது. எனினும், எரிபொருள் நெருக்கடி காரணமாகவும் இன்னசில காரணங்களாலும் அங்கு விமானப் பயணங்கள் ஆரம்பிப்பதில் தாமதமாகும் என்று பின்னர் அறிவிக்கப்பட்ட நிலையில், விமான நிலையம் நேற்றையதினம் கண்துடைப்புக்காக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சில பணியாளர்கள் அழைத்துவரப்பட்டு அலுவலக நடவடிக்கைகள் பூர்வாங்க ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதே நேரம் சில பணிநிலை வெற்றிடங்களுக்கு கேள்வி கோரல்களும் விடுக்கப்பட்டுள்ளன. (ம-26)

### சந்திரிகா...

11 வயது மகனுடனும், 5 வயது மகளுடனுமே அவர் வாவிக்குள் பாய்ந்த நிலையில், தாயும் 5 வயது மகளும் உயிரிழந்துள்ளனர். 11 வயது மகன் உயிருடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, பெற்றோர் தமது குழந்தைகளை கொலை செய்து தாமும் தற்கொலைக்கு முயற்சிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்றும், வறுமையால் வாழமுடியாத நிலையென்றால், பெற்றோர் தமது பிள்ளைகளை அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களிலோ அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலோ ஒப்படைக்க வேண்டும் என்றும் பொலிஸார் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### கடற்கரையில்...

குருநகரைச் சேர்ந்த நைனாஸ் (வயது - 57) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்தநபர் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது திடீரென ஏற்பட்ட வலிப்புநோயால், கடலில் வீழ்ந்து உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

மீனவர் ஒருவர் குறித்த நபர் சடலமாகக் கிடப்பதை அவதானித்த பின்னர் அது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். இதையடுத்து சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-27-23)

### சொன்னது...

சீரழித்துவிட்டார் இவ்வாறு சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தேசிய பாதுகாப்புக்கே முன்னுரிமை என அறிவிப்பு விடுத்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோததாபய ராஜபக்ச தற்போது அந்த உறுதிமொழியை மீறிவிட்டார்.

எனது ஆட்சியின்போது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது எனச் சுட்டிக்காட்டினர். தாங்கள் ஆட்சிப்பீடமேறினால் தேசிய பாதுகாப்புக்கே முன்னுரிமை எனவும் அறிவிப்பு விடுத்தனர். ஆனால், இன்று என்ன நடக்கின்றது? தற்போதைய அரசு சர்வகட்சி அரசு கிடையாது. அதன் மூலம் சர்வதேச ஆதரவைப் பெற முடியாது' - என்றார். (ம-22)

### சரக்கு...

வருகின்றது. அதன்படி, தினசரி சென்னைக்கு 3 சேவையும், திருச்சிக்கு 3 சேவையும், மதுரைக்கு ஒரு சேவையும் இதுவரை வழங்கப்பட்டு வந்தது. ஆனால், தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, எரிபொருள் நெருக்கடி காரணமாக சென்னைக்கு 2 விமான சேவையும், திருச்சிக்கு ஒரு விமான சேவையும், மதுரைக்கு வாரத்துக்கு 3 சேவையும் என குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் சென்னை, திருச்சி, மதுரையில் இருந்து நாளொன்றுக்கு சராசரியாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த 10 தொன் பொருள்கள் தேக்கமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து தனியார் ஏற்றுமதி நிறுவனத்தைச் சேர்ந்த நிர்வாகி ஒருவர், 'சென்னை, திருச்சியில் இருந்து நாளொன்றுக்கு முறையே 5, 2.5 தொன்னும், மதுரையில் இருந்து வாரத்துக்கு 7.5 தொன்னும் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இந்த நிலையில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் மறு அறிவிப்பு வரும் வரை சரக்கு விமானச் சேவையை நிறுத்திக் கொள்வதாக அறிவித்திருப்பது அதிர்ச்சியடையச் செய்துள்ளது. முன்கூட்டியே அறிவிக்காததால் ஏற்கெனவே தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ள பொருள்கள் வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது' - என்றார். (அ-ம)

### உதவிக்கு...

இலங்கைக்கு ஜப்பான் உதவிகளை வழங்காது' என்று ஜப்பானியத் தூதுவர் கூட்டமைப்பினருடனான அண்மைய சந்திப்பில் தெரிவித்தார் என்று செய்திகள் வெளியாகியிருந்த நிலையிலேயே இந்தச் செய்திகள் ஆதாரபூர்வமற்றவை என்று தூதரகம் மறுப்புத் தெரிவித்துள்ளது. (ம)

### சுகாதாரத்துறைக்கும்...

தினம் வெள்ளிக்கிழமை சுகாதாரத் துறையினருக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. இதையடுத்து கைதடி முதியோர் இல்லப் பணியாளர்கள் உள்ளிட்ட பலரும் தமக்கும் எரிபொருள் வேண்டுமென்று கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும், சுகாதாரப் பணியாளர்களுக்கே நேற்றையதினம் எரிபொருள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, சுகாதாரத்துறையினரைத் தவிர எரிபொருள் கோரிய ஏனைய தரப்பினர் தமக்கும் எரிபொருள் வழங்க வேண்டும் என்று வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து அங்கு அழைக்கப்பட்ட பொலிஸார், போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும், சுகாதாரத் துறையினரையும் அங்கிருந்து அப்புறப்படுத்தினர். அத்துடன், அனைவருக்குமான எரிபொருள் விநியோகமும் நிறுத்தப்பட்டது. (ம-17)

**(தொடர்புடைய செய்தி பக்கம்: 2)**

### பனிப்புலத்தில்...

பெற்றோல் நேற்று மீட்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையிலேயே மேற்படி பெற்றோல் மீட்கப்பட்டது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-125)

### நீர்வெறுப்பு...

அந்தப் பகுதியால் பயணித்த சிலரையும், இன்னும் பல நாய்களையும், கால்நடைகளையும் கடித்துக் காயப்படுத்தியுள்ளது.

இதையடுத்து இந்த அசம்பாவிதம் தொடர்பில், இந்துபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தால், ஒட்டுசுட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினருக்கு தெரியப்படுத்தியபோது, எரிபொருள் நெருக்கடியால் குறித்த பகுதிக்கு வரமுடியாதுள்ளது என்றும், அருகில் உள்ள கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களத்தினரை அணுகுமாறும் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களத்தினருக்கு தெரியப்படுத்தியபோது, குறித்த பகுதி தமது ஆளுகைக்கு உட்பட்டதல்ல என தெரிவித்துள்ளனர் என்று இந்துபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய மருத்துவ நெருக்கடியில், நீர்வெறுப்பு நோய் அந்தப் பகுதியில் துரிதமாகப் பரவும் ஆபத்துள்ளது என்றும் இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்களும், இந்துபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பறாளாய் வீதி ஆலமரம் சட்டவிரோதமாக அழிப்பு

## பிரதேசமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 2

சுழிபுரம், பறாளாய் வீதியின் அருகாமையில் நீண்டகாலமாக காணப்பட்ட ஆலமரம் ஒன்று சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ளதாக பிரதேசமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பறாளாய் வீதியில் குளத்தை அண்டி மருத மரங்களும் ஆலமரமும் காணப்பட்டன. எனினும் ஆலமரம் மட்டும் தறிக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய அனுமதி முறைப்படி பெறப்பட்டதா? அவ்வாறு அனுமதி வழங்கியிருப்பின் அனுமதியை வழங்கியது யார்? என அந்தப்பகுதி மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் கிராம அலுவலரிடம் முறையிட்டும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே இதற்குரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு அந்தப் பிரதேசமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14-125)

# வெளியிடங்கள் சென்று தங்குவதை தவிருங்கள்

## தென்மராட்சியில் டெங்கு தாக்கத்தை தவிர்க்க சுகாதார மருத்துவப் பிரிவு அறிவுறுத்து

சாவகச்சேரி, ஜூலை 2

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீண்டும் டெங்கால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனால் டெங்குத் தாக்கம் அதிகமுள்ள பகுதிகளுக்குச் சென்று தங்குவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் என சாவகச்சேரி சுகாதார மருத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

தென்மராட்சியில் கடந்த மாதங்களில் டெங்கின் தாக்கம் குறைவடைந்து காணப்பட்டபோதும் மே மற்றும் ஜூன் மாதங்களில் டெங்கின் தாக்கத்துக்கு உள்ளானோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஜூன் மாதத்தில் டெங்கால் 19 பேர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்கள் வசிக்கும் பகுதிகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட ஆய்வில் டெங்குவின் தாக்கம் ஏற்படக்கூடிய இடங்கள் எவையும் காணப்படவில்லை எனவும் பீடிக்கப்பட்டவர்கள் பெரும்பாலானோர் யாழ். மாவட்டத்தில் டெங்கு பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குச் சென்று தங்கிவிட்டு வந்தவர்களே எனவும் பதிவாகியுள்ளது.

ஆகவே டெங்கு பரவாமல் இருக்க பிரதேச மக்கள் வெளியிடங்களுக்குச் சென்று தங்குவதை தவிர்த்தும் தமது குடியிருப்புகள் மற்றும் அயலிலுள்ள காணிகள் என்பவற்றில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய பொருள்களை அப்புறப்படுத்தி துப்புரவாக வைத்திருக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

**வேலையாள் தேவை**

கிளிநொச்சியில் கட்டுமானப்பணிகள் நடந்து கொண்டிருக்கும் வீடு, காணியை பராமரிக்கக்கூடிய ஒருவர் தங்கி நின்று வேலை செய்வதற்கு தேவை.

- வயது 40-60 இடைப்பட்டவர்
- தேசிய அடையாள அட்டைப் பிரதி
- கிராம சேவையாளரின் அத்தாட்சிக் கடிதமும் தேவை.

தொடர்புகளுக்கு:
077 190 3165

**Canada Visa**

1. Work and Study Riview Program IELTS தேவையில்லை.
2. Student Visa IELTS தேவை.
( Minimum Qualification A/L )

சகல நாடுகளுக்குமான விசா ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Visa Consultant
134, Adiyapatham Road,
Thirunelvely - Jaffna
077 038 5584
naltcjaffna@gmail.com

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள அரியாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குப்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அதற்கமைவாக நாளைமறுதினம் திங்கட்கிழமை மு.ப 8.30 மணி மு.ப.10.15 மணிவரை அரியாலை கண்டி வீதி சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் மு.ப. 10.15 மணி பி.ப. 12 மணி வரை அரியாலை ஏ.வி.வீதி மிருக மருத்துவ நிலையத்திலும் பி.ப. 12.15 மணி பி.ப. 2 மணி வரை பிரப்பங்குளம் அம்மன் கோவிலடி இலந்தைக்குளம் வீதியிலும் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 8.30 மணி மு.ப. 10.15 மணி வரை அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்திலும் மு.ப.10.15 மணி ந.ப. 12 மணிவரை அரியாலை காந்தி சனசமூக நிலையத்திலும் பி.ப. 12.15 மணி பி.ப. 2 மணி வரை அருணோதயா சனசமூக நிலையத்திலும்,

6 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 8.30 மணி மு.ப. 10.15 மணி வரை அரியாலை திருமகள் சனசமூக நிலையத்திலும் மு.ப. 10.15 மணி ந.ப. 12 மணிவரை அரியாலை மலர்மகள் சனசமூக நிலையத்திலும் பி.ப.12.15 பி.ப. 2 மணி வரை செம்மணி வீதி நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையத்திலும் 7 ஆம் திகதி மு.ப. 8.30 மணி மு.ப. 10.15 மணி வரை பேச்சிஅம்மன் கோவிலடி அம்பாள் சனசமூக நிலையத்தி லும் மு.ப.10.15 மணி ந.ப. 12 மணி வரை நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாடசாலை அருகிலும் பி.ப. 12.15 பி.ப. 2 மணி வரை பொன்னம்பலம் வீதி கலைவாணி சனசமூக நிலையத்திலும் 8 ஆம் திகதி மு.ப. 8.30 மணி மு.ப. 10.15 மணி வரை அரியாலை முள்ளி வீதியிலும் மு.ப.10.15 மணி ந.ப. 12 மணி வரை அருளம்பலம் வீதி சந்தி ஆள்காட்டி வீதியிலும் பி.ப. 12.15 பி.ப. 2 மணி வரை அரியாலை இராஜேஸ்வரி வீதியிலும்,

11 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 8.30 மணி மு.ப. 10.15 மணி வரை அரியாலை நாவலர் வீதிச்சந்தி கனகரட்ணம் வீதியிலும் மு.ப.10.15 மணி ந.ப.12 மணி வரை நாவலர் வீதி கனகரட்ணம் மகா வித்தியாலயம் அருகிலும் பி.ப. 12.15 மணி பி.ப. 2 மணி வரை அரியாலை முதலியார் வீதிச்சந்தி பாரதி வீதியிலும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 8.30 மணி மு.ப.10.15 மணி வரை அரியாலை றக்கா வீதிச்சந்தி கச்சேரி நல்லூர் வீதியிலும் மு.ப.10.15 மணி ந.ப.12 மணி வரை அரியாலை பேரின் நாயகம் வீதியிலும் பி.ப.12.15 மணி பி.ப. 2 மணி வரை நாவலர் வீதிச் சந்தி கச்சேரி நல்லூர் வீதியிலும்,

14 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 8.30 மணி மு.ப. 10.15 மணி வரை அரியாலை சாஸ்திரியார் வீதியிலும் மு.ப.10.15 மணி ந.ப. 12 மணி வரை அருளம்பலம் வீதியிலும் (சந்தனமாதா ஒழுங்கை ) பி.ப. 12.15 மணி பி.ப. 2 மணி வரை கச்சேரி கிழக்கு புகையிரத பாதை ஒழுங்கையிலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

எனவே இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப் பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு நாய்க்கான தடுப்பூசிக் கட்டணமாக 50 ரூபா அறவிடப்படும் என்றும் யாழ்.மாநகரசபை சுகா தார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (ஒ-14)

**மரண அறிவித்தல்**

மலர்வு
27 - 11 - 1953



உதிர்வு
01 - 07 - 2022

**கமலாணந்தன் ஞானாம்பிகை (ரதி)**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் Australia வை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாணந்தன் ஞானாம்பிகை (ரதி) நேற்று (01.07.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - கமலாம்பிகை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், கணதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கமலாணந்தனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யோகசுந்தரம் மற்றும் சந்திரசேகரம், சற்குணமலர், காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் மோகனமூர்த்தி, சிவசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மதிமுகநாயகி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் சந்திரமலர் ஆகியோரின் மைத்துனியும், சாந்தி, பார்த்திபன், சுமதி, ஆதவன், செல்வி, ஆதித்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இரத்தினகுமார், நாகராணி, இராகவன், தவமலர், அன்பழகன், மொழினா ஆகியோரின் அன்பு மாமியும், சாரங்கன், சாருஷா, சாருஜன், ஆரதி, அர்த்தனா, ஆருணியா, அருணவி, அற்புதா, அபிநயன், வாகீசன், ஆதிரா, ஆதீசனன், ஆரூரன், ஆதவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சாகித்தியாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (05.07.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 - 2.45 (இலங்கை நேரப்படி காலை 8.30) மணிக்கு Rookwood Crematorium West Chapel, Australia இல் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகள்மார் :
இ.சாந்தி : 076 127 0645
அ.செல்வி : 077 844 5202

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.